பக்கங்கள் எட்டு
விலை ரூபா 5-00 Registered as a News Paper in Sri Lanka

# வலம்புரி
VALAMPURI

சங்கு 02 வள்ளுவர் ஆண்டு 2032 ஆடி 05 சனிக்கிழமை (21-07-2001) தொலைபேசி: 3378 ஒலி: 2்2

அசல் 22 கரட் தங்க நகைகளுக்கு யாழ் நகரில் சிறந்த ஸ்தாபனம்
அர்ச்சனா ஜுவலர்ஸ்
118, கஸ்தூரியார் வீதி
176/1, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.
[கி-2127)

## திவ்வியனின் கைதையடுத்து மூடப்பட்ட
# யாழ். பல்கலைக்கழகம் மீண்டும்
# திங்கட்கிழமை முதல் திறக்கப்படும்!

### துணைவேந்தர் அறிவிப்பு

(அலுவலக நிருபர்)

இப்மாதம் 10ந் திகதி செவ்வாய்க்கிழமை முதல் மூடப்பட்டிருந்த யாழ்ப்பாண பல்கலைக்கழகம் மீண்டும் 23ந் திகதி திங்கட்கிழமை முதல் விரிவுரைகளுக்ககாக திறக்கப்படவுள்ளது.

இதற்கான அனுமதியை பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுத் தலைவர் பேராசிரியர் பீ. ஆர்.ஆர்.என். மென்டிஸ் வழங்கியுள்ளதாக யாழ் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை தெரிவித்துள்ளார்.

யாழ் பல்கலைக்கழக விஞ்ஞானபீட மாணவனும், மாணவர்ஒன்றியத்தின் முன்னாள் செயலாளருமாகிய கிருஷ்ணசாமி திவ்வியன் இம்மாதம 2ந் திகதி இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டிருந்தார்.

மாணவன் திவ்வியனை விடுவிக்கக்கோரி யாழ் பல்கலைக்கழகத்தின் அனைத்துப் பீட மாணவர்களும் கடந்த 4ந் திகதி புதன்கிழமை முதல் விரிவுரைகளைப் பகிஷ்கரித்து வந்தனர்.

இதனையடுத்து யாழ் பல்கலைக்கழகம் கடந்த 10ந் திகதி முதல் மறு அறிவித்தல் வரை மூடப்பட்டது.

பல்கலைக்கழக மாணவர்களின் பகிஷ்கரிப்புப்போராட்டத்திற்கு பாடசாலைகள், மற்றும் உயர்கல்வி நிறுவனங்களும் ஆதரவு வழங்கியதையடுத்து கடந்த 17ந் திகதி மாணவன் திவ்வியன்

(8ம் பக்கம் பார்க்க)

### ஜேர்மனியில் வசிக்கும் ஈழத்தமிழ்க்குடும்பத்தை வெளியேறுமாறு உத்தரவு

(பேரின்)

ஜேர்மனியில் வசித்துவரும் ஈழத தமிழ்க் குடும்ப மொன்றை உடனடியாக நாட்டை விட்டு வெளியேறுமாறு ஜேர்மனிய அரசாங்கம் உத்தரவிட்டுள்ளது

ஜேர்மனியின் தெற்குபகுதியில் உள்ள ஹொன்டிமென்டில் எனும் கிராமத்தில் பல ஆண்டுகளாக குடும்பமாக வசித்துவரும் பிரபாகரன் என்ற குடும்பஸ்தரையே நாட்டை விட்டு வெளியேறுமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

இதேவேளை பிரஸ்தாப குடும்பத்தவரை ஜேர்மனியில் இருந்து வெளியேற்றக் கூடா

(8ம் பக்கம் பார்க்க)

### சர்வஜன வாக்கெடுப்பில் 1 கோடி 24 லட்சம் பேர் வாக்களிக்கத் தகுதி

(கொழும்பு)

ஆகஸ்ட் மாதம் 21ம் திகதி நடைபெறவுள்ள சர்வஜன வாக்கெடுப்பில் ஒரு கோடியே 24 லட்சத்து 28 ஆயிரம் பேர் வாக்களிக்கவுள்ளனர் என தேர்தல் திணைக்களம் அறிவித்துள்ளது.

2000ம ஆண்டின் வாக்காளர் இடாப்பில் புதிதாகசேர்க்கப்பட்டவர்களும் தமது வாக்குகளை வாக்களிப்பதற்குத் தகுதி பெற்றுள்ளனர்.

சர்வஜன வாக்கெடுப்புபணிகளை துரிதமாக மேற்கொள்வதற்கு தேர்தல் திணைக்களத்தில் இருந்து ஓய்வுபெற்ற அதிகாரிகள் அழைக்கப்படவுள்ளதுடன் ஒப்பந்த அடிப்படையில் புதியவர்களும் சேர்த்துக்கொள்ளப்படவுள்ளனர். (வ)

### நாகர் கோவிலில் மோதல்

(நெல்லியடி)

நாகர்கோயில் பகுதியில் விடுதலைப் புலிகளுக்கும் இராணுவத்தினருக்குமிடையில் மோதல் சம்பவம ஒன்று இடம்பெற்றுள்ளது.

நேற்றுக்காலை இடம் பெற்ற இம் மோதல்சம்பவத்தை அடுத்து படையினர் புலிகளின் கட்டுப்பாட்டு பிரதேசங்களை நோக்கி எறிகணைத் தாக்குதலை மேற்கொண்டனர். இம் மோதல் சம்பவத்தில் ஏற்பட்ட சேத விபரங்கள் தெரியவரவில்லை. (ந5-43)

### மட்டு- மாமாங்கத்தில் ராசிக்குழு உறுப்பினர் சுட்டுக் கொலை

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாமாங்கம் அரசினர் பாடசாலைக்கருகில் நேற்றுக்காலை இனந்தெரியாதோரால் குடும்பஸ்தர் ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

சுட்டுக் கொல்லப் பட்டவர் ஈ பி.ஆர்.எல் எவ் ராசிகுழுவின் முன்னாள் உறுப்பினர் தம்பிராஜா தெய்வேந்திராஜா [தேவன்) என இனங்காணப் பட்டுள்ளார்,

இதேவேளை நேற்று நண்பகல் மட்டக்களப்பு மாமாங்கேஸ்வரர் ஆலய தற்காலிக பஸ்தரிப்பு நிலையத்தில் கடமையிலிருந்த பொலிசார்மீது மேற்கொள்ளப்பட்டதுப்பாக்

[8ஆம் பக்கம் பார்க்க]

### மூன்று பொலிஸாரை கைதுசெய்யுமாறு உத்தரவு

(கொழும்பு)

தலைநகர் கொழும்பில் நேற்று முன்தினம இடம்பெற்ற கலவரத்தின் போது இரண்டு அப்பாவிப் பொது மக்கள் கொல்லப்பட்டமை தொடர்பாக அப்போது கடமையில் ஈடுபட்டிருந்த மூன்று பொலிஸாரைக் கைது செய்யுமாறு கொழும்பு நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

கொல்லப்பட்ட இருவரது மரண விசாரணையின் போது இவர்களதுகொலைக்கு மூன்று பொலிஸார் காரணமாக இருந்தார்கள் என்று தெரிவிக்கப்பட்டதை அடுத்தே அவர்களை கைது செய்யுமாறு நீதவான் உத்தரவிட்டுள்ள

[8ஆம் பக்கம் பார்க்க]

### வன்முறை சம்பவங்கள் அமைச்சரவையில் ஆராய்வு

(கொழும்பு)

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா தலைமையில அமைச்சரவைக்கூட்டம் நேற்று நடைபெற்றது.

இக்கூட்டத்தில் நேற்றுமுன் தினம் ஐக்கிய தேசியக்கட்சியினால் நடத்தப்பட்ட ஆர்ப்பாட்டப் பேரணி தொடர்பாகவும், அதில் ஏற்பட்டமோதல் சம்பவங்கள் தொடர்பாகவும் சர்வஜன வாக்கெடுப்பு தொடர்பாகவும் ஆராயப்பட்டுள்ளது.

கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஆர்ப்பாட்டங்களின்போது இடம்பெற்ற மோதல் சம்பவங்களும் அதன் போது பொலிஸா நடந்து கொண்ட விதம் தொடர்பாகவும் சிலஅமைச்சர்களுக்கி

[8ஆம் பக்கம் பார்க்க]

### கூரும் ஷெல் தாக்குதல்

(யாழ்ப்பாணம)

அரியாலை மண்டைதீவுப் பகுதியில் நிலைகொண்டுள்ள படையினர் நேற்றுஇரவு8 30 மணிமுதல் 9.00மணி வரை இடைவிடாது ஷெல் தாக்குதல்கள் மேற்கொண்டனர்.

பூநகரி, கல்முனைப் பகுதி நோக்கியேஇச் ஷெல்தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டதாகத் தெரிவிக்கப் படுகிறது.

[8ஆம் பக்கம் பார்க்க]

### வன்முறைச்சம்பவங்களுக்கு ஐ. தே. கட்சியே பொறுப்பு
### அரசு குற்றச் சாட்டு

(கொழும்பு)

அரசின் தடையையும் மீறி ஐக்கிய தேசியக் கட்சிநேற்று முன்தினம் நடத்திய ஆர்ப்பாட்டப் பேரணியின் போது இடம் பெற்ற வன்முறைச் சம்பவங்களுக்கு அப்பாவிமக்கள் இருவர் கொல்லப்பட்டு 78பேர் காயமடைந்தமைக்கும் ஐக்கிய தேசியக் கட்சியே முழுப் பொறுப்பையும் ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று அரசு தெரிவித்துள்ளது.

ஐக்கிய தேசியக்கட்சி தனது குறுகிய அரசியல் இலாப நோக்கங்களுக்காக குண்டர்களைப் பயன்படுத்தியதனால் இந்த இழப்புக்கள் ஏற்பட்ட

[8ஆம் பக்கம் பார்க்க]

### அரசும்-விடுதலைப்புலிகளும்
# சமாதானப் பேச்சு வார்த்தையை உடனடியாக ஆரம்பிக்கவேண்டும்
### சிறுவர் பாதுகாப்புநிதியம் வேண்டுகோள்

(கொழும்பு)

இலங்கையின் இனப்பிரச்சினை தொடர்பாகஅரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே ஏற்பட்டுள்ள முட்டுக்கட்டை நிலையைப் போக்கி சமாதானப்பேச்சு வார்த்தையை மீண்டும்ஆரம்பிக்கும்படி ஐக்கியநாடுகள் சபையின் சிறுவர்பாதுகாப்பு நிதியம் அரசையும் விடுதலைப் புலிகளையும் கேட்டுள்ளது.

நோர்வேஅரசின் மத்தியஸ்தத்துடன் அரசுக்கும் விடுதலைப்புலிகளுக்கும்இடையே இடம் பெற்றுவந்த சமாதானப்பேச்சுவார்த்தை இடைநடுவில் முறிந்தநிலை காணப்படுவதை அடுத்தே ஐக்கிய நாடுகள் சபையின் சிறுவர் பாதுகாப்பு நிதியம்இருதரப்பினருக்கும் இவ் வேண்டுகோளை விடுத்துள்ளது.

அரசுக்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையில் சமாதானப்பேச்சு முறிவடைந்ததை அடுத்துமீண்டும்யுத்தம் வெடிக்கும் அபாயம் ஏற்பட்டுள்ள நிலையில் இக்கோரிக்கை விடப்பட்டுள்ளதும் இங்கு குறிப்பிடத்தக்கது. (வ)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## கண்டனம்

(வடமராட்சிகிழக்கு)

ஐ.பி.சி வானொலியின் மட்டக்களப்பு செய்தியாளர் ஜி.நடேசன் படையினரால் விசாரணைக்குட்படுத்தப்பட்டு எச்சரிக்கை செய்யப்பட்டதை யாழ்ப்பாண ஊடகவியலாளர் சங்கம் வன்மையாகக் கண்டித்துள்ளது.

ஊடகவியலாளர்களின் சுதந்திரத்தில் படையினர் கைவைப்பதை அரசுதொடர்ந்தும் பார்த்துக் கொண்டிருக்கக்கூடாது

பத்திரிகையாளர்கள் சுதந்திரமாக செயற்பட அரசு உடனடியாக வழிவகை செய்யவேண்டும். என அரசாங்கம் விடுத்த செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(உ-43)

## விநாயகமூர்த்தி எம். பி. கண்டனம்

(கொழும்பு)

கடந்த 18 ஆம் திகதி பருத்தித்துறையில் உள்ள சாவகச்சேரி நீதிமன்றத்தில் வைத்து இராணுவச் சந்தேக நபரினால் ஐ.பி.சி.யின் யாழ்ப்பாணச் செய்தியாளர் வே.தவச்செல்வன் தாக்கப்பட்டமையை அகில இலங்கைத்தமிழக காங்கிரஸின் யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அப்பாத்துரை விநாயகமூர்த்தி கண்டித்துள்ளார். (உ)

## வட இலங்கை பத்திரிகையாளர் சங்கம் கண்டனம்

(யாழ்ப்பாணம்)

பத்திரிகையாளர்கள் தமது கடமைகளை சுதந்திரமாகச் செயற்படுத்த அனுமதிக்க வேண்டும்.

பத்திரிகையாளர்களைப் பயமுறுத்துவதாலோ, தாக்குவதாலோ, எச்சரிக்கை செய்வதாலோ உண்மையை மக்கள் மத்தியில் மூடி வைக்க முடியாது.

ஐ.பி.சி.யின்யாழ்ப்பாணச் செய்தியாளர் வே தவச்செல்வன் தாக்கப்பட்டமை மற்றும் வீரகேசரியின் மட்டக்களப்புச் செய்தியாளருக்கு இராணுவத்தினரால் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளமை ஆகியவற்றைக் கண்டித்து வடஇலங்கை பத்திரிகையாளர் சங்கம் விடுத்த கண்டனக் குறிப்பில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ-77)

## கலந்துரையாடல் ஒத்திவைப்பு

(யாழ்ப்பாணம்)

யூலை 23 ஆம் திகதி திங்கட்கிழமை யாழ்ப்பாணத்தில் உள்ள அமைச்சு அலுவலகத்தில் நடைபெற இருந்த கிராம அலுவலர்களுக்கான கலந்துரையாடல் பிற்போடப்பட்டுள்ளது.

கலந்துரையாடலுக்கான புதிய திகதி பின்னர் அறிவிக்கப்படும் என யாழ்.அரசஅதிபர் அறிவித்துள்ளார். (செ-3)

## 20 இலட்சம் நிதி ஒதுக்கு

(நல்லூர்)

நல்லூர்ப் பிரதேச சபைக்குட்பட்ட, கொக்குவில் பொதுச் சந்தையின் விஸ்தரிப்புக்கு 20 லட்சம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது சந்தைக் கட்டடம், கடைகளுக்கான கட்டடம் என்பன அமைப்பதற்கான நடவடிக்கையை நல்லூர்ப் பிரதேசசபையினர் மேற்கொண்டுள்ளனர் உ103

## ஆடிப்பூர திருவிழா

(நல்லூர்)

கோண்டாவில் தில்லையம்பதி அருள்மிகு ஸ்ரீ சிவகாமி அம்பாள் திருக்கோயிலில் எதிர்வரும் 24 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை ஆடிப்பூர விழா நடைபெறவுள்ளது அபிஷேக ஆராதனை, ருதுசோபன வைபவம், திருஊஞ்சல் தெருவீதியுலா என்பன இடம் பெறவுள்ளன.

(உ-103)

### கியூடெக்நிறுவனத்தினால்

# கிராமங்கள் தோறும் தொடர்ந்தும் விழிப்புணர்வுக் கருத்தரங்குகள்

(ஈச்சமோட்டை)

யாழ்ப்பாணம் மனிதமுன்னேற்ற நடுநிலையத்தினரால் பல்வேறு பகுதிகளிலும் விழிப்புணர்வுக் கருத்தரங்குகள் தொடர்ச்சியாக நடத்தப்பட்டு வருகின்றன:

கடந்த புதன் கிழமைநாரந்தனை திருஇருதயநாதர் ஆலயத்தில் அதன்உதவிப்பங்குத்தந்தை அருட்தந்தைறெமிஜியசன் தலைமையில் இளைஞர் தலைமைத்துவம் பற்றியும் பெற்றோருக்கான விழிப்புணர்வு பற்றியும்கருத்தரங்குகள் இடம்பெற்றன;

கடந்த வியாழன் காரைநகர் சனசமூக நிலையத்தில் தலைமைத்துவ கருத்தரங்கு இடம்பெற்றது

வெள்ளிக்கிழமை கரவெட்டி கன்பொல்லை, இராஜகிராமம் பகுதியில் பெற்றோர் இளைஞர்களுக்கான சமூக விழிப்புணர்வுக் கருத்தரங்கு இடம்பெற்றது.

இன்று குப்பிளான்சனசமூக நிலயத்திலும் நாளை மல்லவம் உடுவில் திருக்குடும்ப ஆலயத்திலும்இளைஞர்களுக்கான தலைமைத்துவ விழிப்புணர்வுக்கருத்தரங்குகளும் பெற்றோருக்கான சமூக விழிப்புணர்வுக்கருத்தரங்குகளும் நடைபெறவுள்ளன.

இக்கருத்தரங்குகளை கியூடெக் நிறுவனத்தின் சமூக விழிப்புணர்வுஇணைப்பாளர் யோசப்பாலாவும் ஊக்குவிப்பாளர் கியோமர் செல்வி சுபோதினி, கருணாகரன் ஆகியோரும் நெறிப்படுத்தி வருகின்றனர்.

(உ-59)

## நிதி அன்பளிப்பு

(நல்லூர்)

கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியின் கல்வி அபிவிருத்திக்காகவும், வறுமைக் கோட்டின் கீழ் உள்ள மாணவர்களின் நலனுக்காகவும் லண்டனில் உள்ள கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியின் பழைய மாணவர் சங்கத்தினரால் 2 லட்சத்து 50 ஆயிரம் ரூபா, அன்பளிப்புச் செய்யப்பட்டுள்ளதாக, கல்லூரிச் சமூகத்தினர் தெரிவித்துள்ளனர்.

(உ-103)

## புனருத்தாரணம்

(நல்லூர்)

கந்தர் மடம ஆத்தி சூடி வீதி ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலயம் பாலஸ்தானம் செய்யப்பட்டுப் புனருத்தாரணத் திருப்பணி மேற் கொள்ளப்பட்டுவருகின்றது:

எதிர்வரும் ஆவணி மாதத்தில் கும்பாபிஷேகம் நடைபெறவுள்ளது (உ-103)

## வடிகால் விஸ்தரிப்பு

(நல்லூர்)

நல்லூர்ப் பிரதேசசபையின் திருநெல்வேலி பொதுச் சந்தைப் பகுதியின் பலாலியாழ். வீதியில் அமைக்கப்பட்டுவரும் வடிகால் திருநெல்வேலி பரவைக்குளம் வரை விஸ்தரிக்கப்படவுள்ளது.

இதற்கான செலவின மதிப்பீட்டைத் தயாரித்துதவும் படி, நல்லூர்ப் பிரதேசசபை வீதி அபிவிருத்தி அதிகார சபையிடம் கோரியுள்ளது.

[உ-103]

## மூலிகைகளை அறிவோம் நூல் வெளியீடு இன்று

(புலோலி)

கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரியில் புதிய கல்விச் சீர்திருத்த செயற்திட்ட நூலான 'மூலிகைகளை அறிவோம். நூல் வெளியீட்டு விழா' இன்று கல்லூரி அதிபர் கே.செல்வராசா தலைமையில் நடைபெறவுள்ளது. நிகழ்வில் வரவேற்புரையை கே.சிவநேசன் வழங்குவார்.

வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் எஸ் சிவராஜா பிரதம விருந்தினராகக் கலந்து கொள்ளவுள்ளார்.

தொண்டைமானாறு வெளிக்கள நிலையத் தலைவர் கே.எஸ் குகதாசன் நூல் வெளியீட்டுரை நிகழ்த்துவார், யாழ் பல்கலைக்கழக விவசாய உயிரியல் துறைத்தலைவர் கே.மிகுந்தன் கைதடி சித்த மருத்துவத்துறை விரிவுரையாளர் திருமதி கே. திலகேஸ்வரி ஆகியோர் ஆய்வுரைகளை நிகழ்த்தவுள்ளனர்;

[உ-52]

## 12 வயதிற் குட்பட்டோருக்கான உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டி

(சுண்டுக்குளி)

யாழ் வலயப் பாடசாலைகளும் உதைபந்தாட்டச் சங்கமும் இணைந்து நடத்தும் 12 வயதிற் குட்பட்டோருக்கான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியில் விளையாடவுள்ள பாடசாலைகளின் விபரம் வருமாறு:

பி.ப.3.00 மணிக்கு சிறுப்பிட்டி அ. த. க. பாடசாலையை எதிர்த்து ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலயமும், பி.ப 3.40 மணிக்கு இடைக்காடு மகா வித்தியாலயத்தை எதிர்த்து உரும்பிராய் றோ. க. பாடசாலையும் மோதவுள்ளன.

(செ-110)

## திட்டமிட்டபடி இன்று பாடசாலைகள் இயங்காது

(கொழும்பு)

இன்று பாடசாலைகள் நடைபெற மாட்டாது என்று கல்வியமைச்சு, சுற்றறிக்கை மூலம் கல்விப் பணிப்பாளர்களுக்கு அறிவித்துள்ளது.

கடந்த 17 ஆம் திகதி குடிசன மதிப்பீட்டுப் பணிகளுக்காக பாடசாலைகள் விடுமுறை விடப்பட்டிருந்தன.

அதற்குப் பதிலாக பாடசாலைகள் இன்று நடைபெறவிருந்தன

ஆனால் தவிர்க்க முடியாத சில காரணங்களினால் நாடு பூராகவும் இன்று பாடசாலைகள் நடைபெறாதென கல்வியமைச்சு மேலும் தெரிவித்துள்ளது. (செ-7)

## அறிவித்தல்

### மாநகரசபை, யாழ்ப்பாணம்

### கட்டாக்காலி மிருகங்களைக் கட்டி வளர்த்தல்

யாழ் மாநகர சபையின் நகர எல்லைக்குட்பட்ட சகல இடங்களிலும் கட்டாக்காலி ஆடு, மாடுகள் பொது இடங்களிலும் வீதிகளிலும் சேதங்களையும் விபத்துக்களையும் ஏற்படுத்த ஏதுவாக அமைவதைத் தடுப்பதற்கு பொது மக்களின் ஒத்துழைப்பு பெரிதும் தேவைப்படுகின்றது ஆடு, மாடுகளை வீடுகளில் கட்டி வளர்ப்பதற்கு ஆவன செய்யுமாறும் இதனை மீறி கட்டாக்காலியாக அலையும் மிருகங்களைப் பிடிப்பதற்கும் தொடர் நடவடிக்கை எடுப்பதற்கும் மாநகர சபைகள் கட்டளை சட்டம் அத்தியாயம் 252 பிரிவு 84(1), 84(2), 84(3), 85இன் பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதை பொது மக்கள் யாவரும் கருத்தில் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

(சி/ 2247)

இ. இராமலிங்கம்
மாநகர ஆணையாளர்,
மாநகரசபை,
யாழ்ப்பாணம்.
18-07-2001.

## பயண அனுமதி வழங்கப்பட்டோர் விபரம்

(மருதனார்மடம் தொடர்ச்சி)

ஜுலைமாதம் 18 ஆம் திகதி வெளியிடப்பட்ட பட்டியலின்படி வெளிமாவட்டங்களுக்குப்பயணம் செய்ய அனுமதி வழங்கப்பட்டவர்களின் இலக்கங்கள் பிரதேச ரீதியாகத் தரப்படுகின்றன;

### சங்கானை

| | |
|---|---|
| 191892 ஏ | 191917 ஏ |
| 191917 பி | 191917 சி |
| 192219 ஏ | 192219 பி |
| 193514 ஏ | 193672 ஏ |
| 193672 பி | 193672 சி |
| 193686 ஏ | 193686 பி |
| 193686 சி | 193686 டி |
| 193686 ஈ | 194304 ஏ |
| 294909 ஏ | 194909 பி |
| 194982 ஏ | |

### மருதங்கேணி

| | |
|---|---|
| 164895 ஏ | 164899 ஏ |
| 164899 பி | 164913 ஏ |
| 164922 ஏ | 164929 ஏ |
| 164929 பி | 164929 சி |
| 164929 டி | 164929 ஈ |
| 164929 எப் | 164930 ஏ |
| 164930 பி | 164930 சி |
| 194931 ஏ | 164933 ஏ |
| 164934 ஏ | |

### நல்லூர்

| | |
|---|---|
| 191868 ஏ | 193440 ஏ |
| 192441 ஏ | 192441 பி |
| 192465 ஏ | 192465 பி |
| 194307 ஏ | 194304 பி |
| 194406 ஏ | |

### சண்டிலிப்பாய்

| | |
|---|---|
| 174795 ஏ | 182641 ஏ |
| 184965 ஏ | 184967 ஏ |
| 184967 பி | 184967 சி |
| 184967 டி | 191783 ஏ |
| 191783 பி | 193638 ஏ |
| 193638 பி | 193693 ஏ |
| 193736 ஏ | 193736 பி |
| 193737 ஏ | 194286 ஏ |
| 194301 ஏ | 194301 பி |
| 194301 சி | 194301 டி |
| 194301 ஈ | 194401 ஏ |
| 194405 ஏ | 194466 ஏ |
| 194490 ஏ | 194490 பி |
| 194490 சி | 194490 டி |
| 194858 ஏ | 194858 பி |
| 195072 ஏ | |

### தெல்லிப்பழை

| | |
|---|---|
| 193620 ஏ | 193620 பி |
| 193621 ஏ | 194236 ஏ |
| 194236 பி | 194403 ஏ |

### உடுவில்

| | |
|---|---|
| 190697 ஏ | 190297 பி |
| 190698 ஏ | 190698 பி |
| 192306 ஏ | 192350 ஏ |
| 192350 பி | 192350 சி |
| 192350 டி | 193610 ஏ |
| 193611 ஏ | 193611 பி |
| 193714 ஏ | 194287 ஏ |
| 195004 ஏ | 195092 ஏ |
| 195092 பி | |

ஜுலை மாதம் 19 ஆம் திகதி வெளியிடப்பட்ட பட்டியலின்படி, வெளிமாவட்டங்களுக்குப்பயணம் செய்ய அனுமதி வழங்கப்பட்டவர்களின் இலக்கங்கள் பிரதேச ரீதியாகத் தரப்படுகின்றன;

### சங்கானை

| | |
|---|---|
| 186857 ஏ | 186857 பி |
| 189322 ஏ | 189375 ஏ |
| 189380 ஏ | 189510 ஏ |
| 189510 பி | 190514 ஏ |
| 190514 பி | 190514 சி |
| 190657 ஏ | 190657 பி |
| 190657 சி | 19 762 ஏ |
| 191781 பி | 191781 ஏ |
| 191792 ஏ | 191809 ஏ |
| 191911 ஏ | 192031 ஏ |
| 192 41 ஏ | 192244 பி |
| 192244 சி | 192290 ஏ |
| 192290 பி | 192291 ஏ |
| 192414 ஏ | 192414 பி |
| 193517 ஏ | 193607 ஏ |
| 193618 ஏ | 193660 ஏ |
| 193660 பி | 193673 ஏ |
| 193789 ஏ | 193789 பி |
| 194207 ஏ | |
| 194218 ஏ | 194252 ஏ |
| 194252 பி | 194258 ஏ |
| 194322 ஏ | 194312 ஏ |
| 194333 ஏ | 194333 பி |
| 194334 ஏ | 194355 ஏ |
| 194355 பி | 194355 சி |
| 194409 ஏ | 194462 ஏ |
| 194890 ஏ | 194890 பி |
| 194893 ஏ | 194924 ஏ |
| 194983 ஏ | 194983 பி |
| 194983 சி | 194984 ஏ |
| 195044 ஏ | 195079 ஏ |

### நல்லூர்

| | |
|---|---|
| 192336 ஏ | 192452 ஏ |
| 192454 ஏ | 193502 ஏ |
| 193502 பி | 193519 ஏ |
| 193703 ஏ | 193703 ஏ |
| 193703 சி | 194194 ஏ |
| 194194 பி | 194246 ஏ |
| 194247 ஏ | 194247 பி |
| 194293 ஏ | 194293 பி |
| 194451 ஏ | 194474 ஏ |
| 194474 பி | 194474 சி |
| 194952 ஏ | 194956 ஏ |
| 194990 ஏ | 194992 ஏ |
| 1950 8 ஏ | 195043 ஏ |
| 194989 ஏ | |

### சண்டிலிப்பாய்

| | |
|---|---|
| 179298 ஏ | 179298 பி |
| 179298 சி | 183148 ஏ |
| 183148 பி | 183244 ஏ |
| 183244 பி | 183244 சி |
| 184926 ஏ | 184966 ஏ |
| 184966 பி | 186804 ஏ |
| 186804 பி | 186977 ஏ |
| 186981 ஏ | 189989 ஏ |
| 190464 ஏ | 190573 ஏ |
| 190603 ஏ | 190603 பி |
| 1907 6 ஏ | 191771 ஏ |
| 191785 ஏ | 191785 பி |
| 191931 ஏ | 191931 பி |
| 191931 சி | 191931 டி |
| 191986 ஏ | 191986 பி |
| 193310 ஏ | 192347 ஏ |
| 192353 ஏ | 192396 ஏ |
| 192396 பி | 192490 ஏ |
| 193551 ஏ | 193551 பி |
| 193584 ஏ | 193598 ஏ |
| 193598 பி | 193659 ஏ |
| 193699 பி | |

## கைதடியில் மீளக்குடியமர்ந்த
# ஆயிரத்து ஐந்நூறு குடும்பங்களுக்கு
# 5 ஆயிரம் ரூபா வழங்கப்பட்டது

## மாநாட்டில் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

கைதடிப் பகுதியில் மீளக் குடியேறியுள்ள சுமார் ஆயிரத்து 500 க்கும் மேற்பட்ட குடும்பங்களுக்கு தலா 5 ஆயிரம் ரூபா விதம் மீளக் குடியமர்வு ஊக்குவிப்புக் கொடுப்பனவு வழங்கப்பட்டுள்ளது.

இதனைவடக்குஅபிவிருத்தி, புனர்வாழ்வு, புனரமைப்பு மற்றும் வடக்கு - கிழக்கு தமிழ் விவகாரங்கள் அமைச்சின் யாழ் அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற கைதடி மீளக்குடியமர்வு தொடர்பான மாநாட்டில் கலந்துகொண்ட மக்கள் தெரிவித்தனர்.

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையில் நடைபெற்ற இம்மாநாட்டில் பாராளுமன்ற உறுப்பினர் கே வி.குகேந்திரன், அரசாங்க அதிபர் க. சண்முகநாதன் ஆகியோர் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

அத்துடன் எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 10 ஆம் திகதிக்கு முன்பாகதென்மராட்சியின் பெரும்பாலான பகுதிகளுக்கும், சாவகச்சேரி நகரப் பகுதிக்கும் சென்று வாழக்கூடிய நிலைமை ஏற்படுத்தப்படலாம் என்று இம்மாநாட்டில் கலந்துகொண்ட படைத்தரப்பின் நிர்வாக அதிகாரி தெரிவித்தார்.

வரணி, இயற்றாலை, மிருசுவில், கொடிகாமம் மீசாலை போன்ற கிராமங்களுக்கு மக்கள் சென்று வாழபடையினர் உடனடியாக அனுமதிக்க வேண்டுமென கலந்துகொண்ட பொதுமக்கள் வலியுறுத்திக் கேட்டுக் கொண்டமை குறிப்பிடத்தக்கது.

(உ-10,6)

## கைதடிப் பகுதியில்
# பொது இடங்கள்
# சிரமதானம்மூலம் துப்பரவு

[மந்திகை]

கைதடிப் பகுதியில் மக்கள் மீளக்குடியமர ஆரம்பித்ததையடுத்து வீதிகள், பொது இடங்கள் என்பவற்றை சிரமதானம் மூலம் துப்பரவு செய்வதில்அப்பகுதி சனசமூக நிலையங்கள் மற்றும பொது அமைப்புகள் ஈடுபட்டு வருகின்றன.

இந் தப்பணியில், கைதடிப் பிரதேச 6 கிராம அலுவலர் பிரிவுகளைச் சேர்ந்த 12 சனசமூக நிலையங்கள் ஈடுபட்டுள்ளன.

இச் சிரமதானப் பணி மூலம் வீதிகளை மூடியிருக்கும் பற்றைகள் அகற்றப்படுவதுடன், மயானங்களும் துப்பரவு செய்யப்பட்டு வருகின்றன. [உ-23]

## பளைப் பகுதி மக்களுக்கு
# புதிய'இ','உ'உலர்உணவு அட்டைகள் வழங்கல்

(யாழ்ப்பாணம்)

பச்சிலைப் பள்ளியிலிருந்து இடம் பெயர்ந்து ஏனைய பிரிவுகளில் தங்கியுள்ள மக்களுக்கு பச்சிலைப்பள்ளி பிரதேச செயலகத்தினால் புதிய 'இ', 'உ' உலர் உணவு அட்டை, குடும்பப் பதிவு அட்டை, சேத மதிப்பீட்டுப் படிவம் ஆகியன வழங்கப்படவுள்ளன.

பச்சிலைப் பள்ளியிலிருந்து இடம் பெயர்ந்து பருத்தித்துறைப்பகுதியில் தங்கியுள்ளவர்கள் எதிர்வரும்23ஆம்திகதி திங்கட்கிழமையும்; வல்வெட்டித்துறை மருதங் கேணிப்பகுதியில் தங்கியுள்ளவர்கள் எதிர்வரும் 25 ஆம் திகதி புதன்கிழமையும் கரவெட்டிப் பகுதியில் தங்கியுள்ளவர்கள் 26 ஆம் திகதி வியாழக்கிழமை பருத்தித்துறையில் இயங்கும் பளைப் பிரதேச செயலகத்திற்கு சமுகமளித்து மேற்படி படிவங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

சண்டிலிப்பாய், சங்கானை பகுதிகளில் தங்கியுள்ளவர்கள 24 ஆம் திகதி செவ்வாய்க்கிழமையும் யாழ்ப்பாணம், நல்லூர், கோப்பாய், உடுவில், தெல்லிப்பழைப் பகுதிகளில் தங்கியுள்ளவர்கள் 27 ஆம் திகதி வெள்ளிக்கிழமையும் யாழ்ப்பாணத்தில் இயங்கும் பளைப்பிரதேச செயலக உப அலுவலகத்திற்கு சமுகமளித்து மேற்படி படிவங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

மேற்படி படிவங்களைப் பெற்றுவரும் குடும்பத் தலைவர்கள், தமது அடையாள அட்டை, குடும்பத்திலுள்ள அனைவரினதும் விசேட அடையாள அட்டை விபரங்கள், பழைய 'இ', 'உ' அட்டை, தற்போது தங்கியுள்ள பிரதேசசெயலர் பிரிவினால் வழங்கப்பட்ட உலர் உணவு அட்டை, இடம் பெயர்ந்து மீசாலையில் தங்கியிருந்த காலப் பகுதியில்அங்கு செயலகத்தால் வழங்கப்பட்ட உலர் உணவு அட்டை என்பனவற்றையும் எடுத்து வருமாறு பச்சிலைப் பள்ளி பிரதேச செயலர் கேட்டுள்ளார். (செ)

## வலி வடக்கில்
# பலாலி ஆசிரிய கலாசாலை மாணவர்கள் அதிருப்தி

(யாழ்ப்பாணம்)

பலாலி ஆசிரிய கலாசாலையை வலி வடக்கில் ஆரம்பிக்க வேண்டும் என வலி வடக்கு பிரதேச செயலர் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் கடந்த செவ்வாயன்று எடுக்கப்பட்ட தீர்மானம் குறித்து பலாலி ஆசிரிய கலாசாலை மாணவர்கள் அதிருப்தி வெளியிட்டுள்ளனர்.

தற்போது உள்ள சூழ்நிலையில் மேற்படி வலி வடக்குப் பகுதி பாதுகாப்பற்றது எனவும், பல்வேறு பகுதிகளில் இருந்து கலாசாலைக்கு வரும் மாணவர்கள் இடம் மாற்றத்தினால் தமது பிரயாணங்களில் பிரச்சினைகளை எதிர் நோக்கவேண்டி வரும் எனவும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

அத்துடன், வெளிமாவட்டங்களில் இருந்து வந்து இங்கு தங்கி இருக்கும் கலாசாலை மாணவர்கள் மேற்படி இடமாற்றத்தினால் பல்வேறு இடர்களை எதிர்நோக்க வேண்டிவரும் எனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

எனவே, தற்போதுள்ள அசாதாரண நிலையைக் கருத்தில் கொண்டு அப்பகுதியில் ஆசிரிய கலாசாலை அமைப்பதால் ஏற்படும் அசௌகரியங்களை புரிந்து உரியவர்கள் நடவடிக்கை எடுக்கவேண்டும் எனவும் மாணவர் மத்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது; (உ-9)

## ஒன்றுகூடல்

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட அபிவிருத்தித் தொண்டர் ஒன்றுகூடல் நிகழ்வு கடந்த திங்கட்கிழமை நீர்வேலி தெற்கு ஸ்ரீமுருகன் மாதர் சங்க மண்டபத்தில் நடைபெற்றது. (உ)

## இராசி பலன்

21/07/2001

(ஆடி 5, சனி)

பிரதமை மு இ 1 45 வரை
பூசம் மு இ 11 20 வரை
ராகுகாலம் 9 01-10 31
நல்லநேரம் 3 01-4 31
சித்தம்

**மேடம்**

உறவினர் மனஸ்தாபம், மனச்சஞ்சலம், அற்பர்நேசம், முயற்சி தாமதம்.

**இடபம்**

காரிய அனுகூலம், தன வரவு, இனியசம்பவம், அந்நியர் சந்திப்பு.

**மிதுனம்**

வீண் வாக்குவாதம், காரிய தாமதம், தனவிரயம், அமைதிக்குறைவு.

**கடகம்**

நல்லமுயற்சி, சயனசுகம், உஷ்ணநிலை, கற்பனை மிகுதி.

**சிங்கம்**

உணர்ச்சிவசப்படல், காரிய தாமதம், அவமானம், சயன சுகக்குறைவு

**கன்னி**

கௌரவம், காரியநன்மை, மனமகிழ்ச்சி, பொருள் சேர்க்கை.

**துலாம்**

சுப நிகழ்வு, கடின உழைப்பு, அதிகாரம், முயற்சி கைகூடும்;

**விருச்சிகம்**

நிலைமாற்றம், உடல் சோர்வு, தந்தைவழி உறவு, முயற்சிதாமதம்.

**தனுசு**

நண்பர்கள் வெறுப்பு, காரிய தடங்கல், பிரயாணபயம், எதிர்ப்பு.

**மகரம்**

பிரயாணம், நண்பர்கள் சந்திப்பு, மதிக்கப்படுதல், முயற்சி கைகூடும்.

**கும்பம்**

காரிய அனுகூலம், மகிழ்ச்சியான சம்பவம், திடீர் பயணம், சத்துரு ஜெயம்.

**மீனம்**

குடும்பக் கவலை, தாழ்வு நிலை, காரியதாமதம், வியாதி.

(பழையநேரப்படி கணிப்பிடப்பட்டது)

-வளவன்-

# செய்தித் துளிகள்

## வீரர்களுக்கு பாதுகாப்பு

(கொழும்பு)

கொக்கோகோலா வெற்றிக்கிண்ணத்திற்கான கிரிக்கெட் போட்டியில் கலந்து கொள்ள இலங்கை வந்திருக்கும் இந்திய, நியூசிலாந்து அணி வீரர்கள் பலத்த பாதுகாப்புடன் தாஜ் சமுத்திரா ஹோட்டலில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். (வ)

## படையினர் இருவர் காயம்

(கொழும்பு)

கடந்த 15 ஆம் திகதி கெப்பிற்றிபொலாவ காட்டுப் பகுதியில் படையினர்க்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையேயான மோதலின் போது படைத்தரப்பில் இருவர் காயமடைந்துள்ளதாக ஊடகத் தகவல் மையம் விடுத்த செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ)

## கிளைமோர் தாக்குதல்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு கல்முனைப் பகுதியில் இராணுவ கவச வாகனமொன்று விடுதலைப் புலிகளின் கிளைமோர் தாக்குதலுக்கு இலக்காகியுள்ளது.

புதன் காலை இடம் பெற்ற இச்சம்பவத்தில் விசேட அதிரடிப் படைவீரர் ஒருவர் படுகாயமடைந்துள்ளார் (ந-5)

## நால்வர் பலி

(கொழும்பு)

கடந்த 16 ஆம் திகதி காலை 9 30 மணியளவில் வெலிஓயா வடக்கு ஜனகபுர பகுதியில் படையினர் பதுங்கியிருந்து தாக்கியதில் விடுதலைப் புலி உறுப்பினர்கள் நால்வர் பலியானதாக ஊடகத்தகவல் மையம் விடுத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ)

## பெண்போராளி களப் பலி

[வவுனியா]

முகமாலைப் பகுதியில் கடந்த 14 ஆம் திகதி இராணுவத்துடன் ஏற்பட்ட மோதலொன்றில் கப்டன் சாந்தசௌரி (கந்தசாமி இந்திமலர்- மட்டக்களப்பு) என்ற போராளி களப்பலியானதாக புலிகள் அறிவித்துள்ளனர். (உ-8)

## உதவிப்பொது முகாமையாளர் நியமனம்

(யாழ்ப்பாணம்)

இலங்கை வங்கி வடபிராந்திய உதவிப் பொது முகாமையாளராக திருமதி கமலராணி துரைராசா பதவியேற்றுள்ளார்.

முன்னர் யாழ். இலங்கை வங்கி மேற்தரக் கிளையின் பிரதான முகாமையாளராக கடமையாற்றி, பதவி உயர்வுடன் கொழும்பு சென்று தற்போது உதவிப்பொது முகாமையாளர் பதவியை ஏற்றுள்ளார்.

இவர் பேராதனைப் பல்கலைக்கழக சிறப்பு பட்டதாரியும் யாழ் வேம்படி மகளிர் உயர்தர பாடசாலையின் பழைய மாணவிகள் சங்கத் தலைவியுமாவார்; (உ)

## உரம் தாராளம்

(உடுவில்)

நீண்டகாலமாகத்தட்டுப்பாடாக இருந்து வந்த அடிக்கட்டுப் பசளைகளான யூரியா, எம் ஓ பீ. போன்ற உரவகைகள் தற்பொழுதுதேவைக்கேற்றவாறு உடுவில் கமநல கேந்திரநிலையத்தில் பெற முடியும்; (உ-109)

## அமைப்பாளர் கூட்டம்

(கொழும்பு)

சர்வஜன வாக்கெடுப்பு தொடர்பான நடவடிக்கைகளை மேற்கொள்ள ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சிஅமைப்பாளர்களின் கூட்டம் நாளை 22 ஆம் திகதி ஜனாதிபதி தலைமையில் நடைபெறவுள்ளது.

இதன்போது சர்வஜன வாக்கெடுப்பில் வெற்றி கொள்வதற்கான வழிவகைகள் குறித்து ஆராயப்படுமென தெரிவிக்கப்படுகிறது. (உ-5)

## மாதாந்தக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ் மாநகர சபையின் மாதாந்தப் பொதுக்கூட்டம் எதிர்வரும் 24 ஆம் திகதி காலை 9 30 மணிக்கு மேஜர் ரவிராஜ் தலைமையில் இடம்பெறவுளளது. (உ-10-6)

## வாகனம் பறிமுதல்

(யாழ்ப்பாணம்)

ஊரெழுப் பகுதி வர்த்தகரான சின்னராசா வரதராசா என்பவர் கடந்த 6 ஆம் திகதி படையினரால் பறித்துச் செல்லப்பட்ட தனது பெறுமதி மிக்க வாகனத்தை மீட்டுத் தருமாறு யாழ். மனித உரிமைகள் ஆணைக்குழு அலுவலகஅதிகாரியிடம்முறைப்பாடு செய்துள்ளார். (உ-6)

## தேர்த் திருவிழா

(நல்லூர்)

வண்ணை ஸ்ரீவைத்தீஸ்வர சுவாமி தேவஸ்தானத்தின் தேவிமஹோற்சவத்தேர்த்திருவிழா இம் மாதம் 23 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9. 30 மணிக்கு நடைபெறவுள்ளது

செவ்வாய்க்கிழமைதீர்த்தத் திருவிழாவும், புதன்கிழமை திருவூஞ்சலும் இடம்பெறவுள்ளன (உ-103)

## நற்செய்திக் கூட்டம்

[யாழ்ப்பாணம்]

மிஷனறி சபையினர் நடத்தும் தெய்வீக சுகமளிக்கும் நற்செய்திக் கூட்டம் இன்று சங்கானை குடியேற்றத் திட்டத்திலும், 24 ம் திகதி அரியாலை காந்தி சனசமூக நிலையத்திலும், 25 ம் திகதி புத்தூர் 10 ம் கட்டைப்பகுதியிலும் 28 ம் திகதி கோண்டாவிலிலும் நடைபெறவுள்ளது.

தினமும் பி.ப3 .00மணிக்கு ஆரம்பமாகும் இந் நிகழ்வில் சகோதரர்செபுலோன், சுதாகரன் ஆகியோர் நற்செய்தியை வழங்குவர். (உ-104)

## இரு வீடுகளில் களவு

(கொக்குவில)

கடந்த புதன்கிழமை இரவு கொக்குவில் சந்தி அச்சுக் கூட ஒழுங்கைப் பகுதியிலுள்ள இரண்டு வீடுகளில் உட்புகுந்த திருடர்கள் நகைகள் மற்றும் பெறுமதி மிக்க பொருட்களைக் களவாடிச் சென்றுள்ளனர்.

இதேவேளை அயலில் உள்ள கடைகளை உடைத்து திருட எடுத்த முயற்சி! அயலவர்கள் விழித்துக் கொண்டதால் பலிதமாகவில்லை என தெரிய வந்துள்ளது. [உ-126-104]

## வருடாந்த உற்சவம்

(புலோலி)

தென் புலோலியூர் தான் தோன்றி உபய கதிர்காமக் கந்தன், ஆலய வருடாந்த உற்சவம் இன்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது. தொடர்ந்து பதினைந்துதினங்கள் திருவிழா நடைபெற்று ஆடித் திருவோணதினத்தன்று தீர்த்தத் திருவிழா நடைபெறவுள்ளது. (செ-52)

க. பொ. த. உயர்தர மாணவர்க்கான

# உயிரியல்

ஆசிரியர்: சே. சுகந்தன் B.Sc.

## வினா இல. 15 இற்கான விடைகள்

(தொடர்ச்சி)

**வினா-1 V**

2) வெப்பநிலை:- வெப்பநிலை 0 பாகை C இலும் குறைவாக உள்ள போது நொதியங்கள் உயிர்ப்பற்றதாகக் காணப்படும். அமைப்பழிவதில்லை. வெப்பநிலை 10 பாகை C இல் இருந்து 40 பாகை C வரை அதிகரிக்கும் போது நொதிய, கீழ்ப்படை மூலக்கூறுகளின் இயக்க சக்தியும் அதிகரிப்பதால் அவை ஒன்றுடன்ஒன்று மோதிப்பொருந்தும் சந்தர்ப்பமும் அதிகரிப்பதால் ஒவ்வொரு 10பாகைC அதிகரிப்புக்கும் நொதியத் தாக்க வீதம் இரண்டு மடங்காக அதிகரிக்கும்; நொதியத் தாக்க வீதம் உயர்வாக உள்ள வெப்ப நிலை சிறப்பு வெப்பநிலை எனப்படும்.

இவ் வெப்பநிலையை விட வெப்பநிலை அதிகரிப்பின் நொதியத்தின் புரதப் பகுதிகள் அமைப்பழிவுக்கு உட்படுவதால் தாக்க வீதம் குறையும்.

3) **நொதியச் செறிவு:-** கீழ்ப்படைச் செறிவு உயர்வாக உள்ள போதும் வெப்பநிலை, PH மாறாமல் உள்ள போதும் நொதியச் செறிவு கூடும் போது தாக்கவீதமும் நேர் விகிதசமனாக அதிகரிக்கும்; குறிப்பிட்ட நிலையின் பின்னர் தாக்க வீதம் மாறாது.

4) **கீழ்ப்படைச் செறிவு:-** நொதியச் செறிவு மாறாமல் இருக்கும் போது கீழ்ப்படைச் செறிவு அதிகரிக்கும் போது நொதியத் தாக்க வீதமும் அதிகரிக்கும். எனினும் குறிப்பிட்ட ஓர் நிலையின் பின்னர் கீழ்ப்படைச் செறிவு அதிகரித்தாலும் தாக்க வீதம் மாறாது ஏனெனில் எல்லா நொதிய மூலக்கூறினதும் தொழிற்படும் பகுதிகள் கீழ்ப்படை மூலக்கூறால் நிரம்பலடைந்ததே ஆகும்.

5) விளைபொருட்களின் செறிவு:- விளைபொருட்களின் செறிவு கூடும் போது எதிர்ப் பின்னூட்டல் மூலம் தாக்க வீதம் குறையும். விளைபொருட்கள் அகற்றப்பட தாக்க வீதம் கூடும்.

6) நிரோதிகள்:- இதில் 2 வகைகள் உண்டு:

a) போட்டிக்குரியது;- இந்த நிரோதிப் பதார்த்தங்கள் கீழ்ப்படை மூலக்கூறின் அமைப்பைப் பெருமளவில் ஒத்திருப்பதால் அவை நொதியமேற்பரப்புடன் போட்டியிட்டு இணைவதால் தாக்கம் நிரோதிக்கப்படும்.

b) போட்டியற்ற நிரோதி:- இவை நொதியங்களின் புரதப் பகுதியை அமைப்பழியச் செய்வதால் நொதியத் தாக்கம் நிரோதிக்கப்படும்.

உதாரணம்:- வன்காரம், வன்னமிலம், பாரஉலோகங்கள்:

i) சுக்குரோசுக் கரைசல் ஒன்றினை பெனடிக்கின் கரைசல் இட்டு வெப்பமாக்கப்படும். நிற மாற்றம் அவதானிக்கப்படாது. சுக்குரோசுக்கு சுக்கிரேசு நொதியம் இட்டு 30 நிமிடம் வைத்திருந்த பின்னர் பெனடிக்கின் கரைசல் இட்டு வெப்பமாக்கும் போது செங்கட்டிச் சிவப்பு நிற வீழ்படிவு பெறப்படும். சுக்கிரேசுக் கரைசலை வெப்பமாக்கி பின்னர் குளிரவிட்டு சுக்குரோசுக் கரைசலுடன் இட்டு பெனடிக்கின் கரைசலை விட்டு மீண்டும் வெப்பமாக்கும் போது நிறமாற்றம் எதுவும் அவதானிக்கப்படமாட்டாது;

vii) இரு பரிசோதனைக் குழாய்களுக்கு சமகனவளவு பீற்றூட் சாறு எடுக்கப்பட்டு ஒரு சோதனைக் குழாயுள் மேலதிக பீலிங்கின் கரைசல் இட்டு கொதிக்கவிடப்படும் இங்கு செங்கட்டிச் சிவப்பு நிற வீழ்படிவு தோன்றும். இது தாழ்த்தும் வெல்லம் இருப்பதை உறுதிப்படுத்தும். மற்றைய சோதனைக் குழாயுள் ஐதான HCl இட்டு கொதிக்க விடப்பட்டு பின்னர் பெனடிக்கின் கரைசல் இட்டு சூடாக்கும் போது செங்கட்டிச் சிவப்பு நிற வீழ்படிவு பெறப்படும். வீழ்படிவுகளின் அளவை ஒப்பிடும் போது இரண்டாவது சோதனைக் குழாயில் அதிகளவு வீழ்படிவு தோன்றியிருக்கும்; இது தாழ்த்தா வெல்லமும் இருப்பதை உறுதிப்படுத்துகின்றது.

**அல்லது**

பீற்றூட் சாற்றுக்கு பெனடிக்கின் கரைசல் இட்டு வெப்பமாக்கும் போது செங்கட்டிச் சிவப்பு நிற வீழ்படிவு தோன்றும். இது தாழ்த்தும் வெல்லம் இருப்பதை உறுதிப்படுத்தும்; பின்னர் வீழ்படிவை வடித்தெடுக்கப்படும் வடிதிரவத்திற்கு ஐதான HCL இட்டு கொதிக்க வைத்து பின்னர் மீண்டும் பெனடிக்கின் சோதனைப் பொருளை இட்டு வெப்பமாக்க செங்கட்டிச் சிவப்பு நிற வீழ்படிவு தோன்றும். இது தாழ்த்தா வெல்லம் இருப்பதை உறுதிப்படுத்துகின்றது;

**வினா 2 V**

**வகுப்புகளின் சிறப்பியல்புகள்**

a) Class;- Turbellaria:-

- இதனுள் சுயாதீனவாழும் தட்டைப்புழுக்கள் அடங்கும்;
- மேற்தோலில் பிசிர்கள் காணப்படும்;
- கட்புள்ளி போன்ற புன்னங்கம் காணப்படும்.
- உணவுக்கால்வாயில் 3 கிளைகள் காணப்படும்
- துண்டுபடாத உடலமைப்பு காணப்படும்.
- உடலின் நடுவயிற்றுப்புறத்தில் வாய் காணப்படும். குதம் இல்லை. தொண்டை வெளித் தள்ளப்படக்கூடியது.
- கொழுக்கிகள் முட்கள், உறிஞ்சிகள்; மூடுபடை இல்லை.
- தலை விருத்தியடைந்திருக்கும்.
- நன்னீர், கடல் நீர், ஈரலிப்பான தரையில் வாழும்.
- புத்துயிர்ப்பு காணப்படும்
- இருபாலானவை நேரடி விருத்தி, புறத்தோல் இல்லை;

உதாரணம்;- Planaria-

b) Clasl:- Trematoda:-

- அக ஒட்டுண்ணியாக அல்லதுபுற ஒட்டுண்ணியாகக் காணப்படும்;
- துண்டுபடாத தட்டையான இலை வடிவ உடல்
- பிசிர்கள், கொழுக்கிகள் இல்லை
- உறிஞ்சிகள், முட்கள், உயிர்ப்பான மூடுபடை என்பன காணப்படும்;
- வாய் உறிஞ்சிக்கும் வயிற்றுப்புறஉறிஞ்சிக்கும் இடையே உற்பத்தித்துவாரம் காணப்படும்.
- உணவுக்கால்வாயில் 2 கிளைகள் காணப்படும்.
- தலை இல்லை
- இருபாலானவை வாழ்க்கை வட்டத்தில் முதலான, துணையான விருந்து வழங்கிகள் காணப்படும்.

உதாரணம்: Fasciola hepatica - ஈரல் தட்டையன்

c) Class Cestoda

யாவும் அக ஒட்டுண்ணிகள்

- முட்கள் அற்ற உயிர்ப்பான மூடுபடை உண்டு
- நாடா போன்ற உடலமைப்பு
- முன்முனையில் பற்றிப் பிடிக்கவெனக் கீடகச்சென்னி காணப்படும்
- உடலில் போலியான துண்டுபடல் அல்லது முட்டுத்தொடராதல் காணப்படும்
- உணவுச் சுவடு இருப்பதில்லை
- வாய் இல்லை
- உறிஞ்சிகள், கொழுக்கிகள், தடித்தபுறத்தோல் காணப்படும்.

உதாரணம்:- Taenia Solium-நாடாப்புழு

**வினா- 3**

1)
- இலைகளில் ஒளித்தொகுப்பு மூலம் தொகுக்கப்பட்ட விளைபொருட்களை தாவரத்தின் ஏனைய பகுதிகளுக்கு கடத்தவெனச் சிறப்படைந்த இழையம்உரியமாகும்.
- உரிய இழையத்தில் நெய்யரிக்குழாய். உரியப்புடைக் கலவிழையம், தோழமைக் கலங்கள், உரியநார் என்பன அடங்கும்.
- நெய்யரிக்குழாய் ஊடாக சுக்குரோஸ், விற்றமின்கள், ஓமோன்கள், அமினோ அமிலங்கள் போன்றன கடத்தப்படும்.
- முதிர்ந்த நெய்யரிக் குழாய் மூலகம் உயிருள்ளது கருவைக் கொண்டிருப்பதில்லை.
- இதன் கலச்சுவரில் செலுலோஸ் காணப்படும் இலிக்னின் இருப்பதில்லை.
- நெய்யரிக்குழாய் மூலகத்தின் இறுதிச் சுவரில் நெய்யரித் தட்டு காணப்படும்.
- ஒவ்வொரு நெய்யரிக்குழாய் மூலகமும் முனைக்கு முனை இணைக்கப்பட்டிருக்கும். இவற்றுக்கிடையே நெய்யரித் தட்டுகாணப்படும். இதனாலே தொடர்ச்சியான நெய்யரிக் குழாய் உண்டாகின்றது
- ஒவ்வொரு நெய்யரிக் குழாய் மூலமும் ஒன்று அல்லது பல தோழமைக் கலத்துடன் தொடர்புடையது.
- தோழமைக் கலத்தில் தனிக்கரு காணப்படும்.
- நெய்யரிக்குழாய் மூலகங்களுக்கிடையிலும் தோழமைக் கலத்திலும் பலமுழுவுரு இணைப்புகள் காணப்படும்
- சில சமயம் தோழமைக் கலத்தினுள்ளும் உரியப்புடைக் கலவிழையத்துள்ளும் சுவரின் உள்வளர்ச்சி காணப்படும். இந்த உள் வளர்ச்சியைக் கொண்டகலங்கள் கடத்தும் கலங்கள் எனப்படும். இதனால் பதார்த்தங்கள் கடத்தல் இலகுவாக்கப்படும்.
- சுக்குரோஸ் கரைசல் நிலையில் கடத்தப்படும்.
- உரியக் கடத்தல் மூலத்தில் இருந்து தாழி வரை நிகழும். இது நிலையான தல்ல; வித்து முளைத்தலின் போது தாழியானது மூலமாகவும் தொழிற்படலாம்,
- ஆரம்பத்தில் பதார்த்தங்கள் மூலத்தில்இருந்து நெய்யரிக்குழாய் மூலகத்தை அடைவதால அங்கு அவை செறிவாக்கப்படும். இது உரியச் சுமையேற்றல எனப்படும்
- இறுதியில் பதார்த்தங்கள் நெய்யரிக் குழாய் மூலகத்தில் இருந்து தாழியை நோக்கி கடத்தப்படும், இது உரியச் சுமை இறக்கல் எனப்படும்;
- உரியத் தூடாக உணவு கடத்தப்படுவதை அமுக்க ஓட்டக் கொள்கை மூலம் விளக்கலாம்.
- உரியச் சுமையேற்றலும் உரியச் சுமை இறக்கலும் உயிர்ப்பான செய் முறைகளாகும். இதற்குச் சக்தி அவசியமாகும்.
- நெய்யரிக்குழாய் மூலகத்தினுள் அதிகரித்துள்ள கரையச் செறிவினால் அங்கு நீரழுத்தம் குறையும்.
- இதனால் பிரசாரணம் மூலம் நீர் காழில் இருந்து உரியத்துள் கடத்தப்படும்;
- இதனால் மூலத்தின் அண்மையான நெய்யரிக்குழாய் மூலகப் பகுதியில் வீக்க அமுக்கம் அல்லது நீர் நிலையியல் அமுக்கம் கூடும். அதேவேளை நெய்யரிக் குழாய் மூலகத்தில் இருந்து தாழிப் பகுதியில்சுமை இறக்கப்படுவதால் அங்கு வீக்க அமுக்கம் குறையும இதனால் இங்கு நீரானது நெய்யரிக்குழாய் மூலகத்தில் இருந்து காழினுள் கடத்தப்படும்

  இங்கு ஏற்படும் அமுக்க வேறுபாட்டின் காரணமாக உரியச்சாறு மூலகத்தில் இருந்து தாழியை நோக்கி உயிர்ப்பற்ற முறையில் பாயும்.
- உரியத் தூடாக இரு திசையிலும் பதார்த்தம் கடத்தப்படும்;

2)
- ★ வேரினால் அகத்துறிஞ்சப்படும் நீர், கனியுப்பு போன்றவற்றை தாவரத்தின் அங்குரப் பகுதிக்குக் கடத்தவெனச் சிறப்படைந்த இழையம் காழ் இழையமாகும்.
- ★ காழில் காழ்க்கலன், காழ்ப்புடைக்கல விழையம், காழ் நார், என்பன அடங்கும்.
- ★ முதிர்ந்த காழ்க்கலன், காழ்நார் என்பன உயிரற்றவை கருவைக் கொண்டிருப்பதில்லை.
- ★ இதன் கலச்சுவரில் இலிக்னின் காணப்படும்.
- ★ துணைச்சுவரான இலிக்னின் பின்வரும் 5 வடிவங்களில் படியும்; கங்கண உரு, சுருளியுரு, ஏணியுரு, வலை வடிவம், குழி கொண்டது;
- ★ மண்ணீர்க்கரைசலில் நீரமுத்தம் உயர்வாகவும் வேர் மயிர்க்கலத்தில் நீரமுத்தம் குறைவாகவும் இருப்பதால் உயிர்ப்பற்ற முறையில் நீர் வேர் மயிர்க்கலத்தை அடையும்; அகத்துறிஞ்சும் பரப்பைக் கூட்டவெனவே வேர்மயிர் காணப்படும். கனியுப்பு உயிர்ப்பான முறையிலே வேர்மயிர்க் கலத்தை அடையும்;
- ★ வேர்மயிர்க்கலத்தை அடைந்த நீரையும் கனியுப்பையும் கொண்டகரைசலானது apoplast Symplast Vacular Pathway ஊடாக வேரின்காழை அடைகின்றது.

  இம் மூன்று பாதைகளிலும் Symplast பாதையே முழுமையானதாகும்.
- ★ இதன் காரணமாக வேரின் காழினுள் நீரையும் கனியுப்பையும் கொண்ட கரைசலின் செறிவு கூடும்.
- ★ தாவரத்தின் அங்குரப் பகுதியூடாக நீர் ஆவியாக இழக்கப்படுவதால் இலையில் உள்ள காழினுள் ஆவியுயிர்ப்பு இழுவிசை தொழிற்படும். அத்துடன் காழினுள் உள்ள நீர் மூலக் கூறுகளுக்கிடையே அதி உயர் பிணைவு விசைஉள்ளதாலும் காழ்ச்சுவருக்கும் நீர் மூலக்கூறுகளுக்கும் இடையே உயர் ஒட்டற்பண்பு விசை காணப்படுவதாலும் நீர் நிரலானது அறுபடாமல் அங்குரப் பகுதியை நோக்கி தொடர்ச்சியான நீர்நிரலாகக் கடத்தப்படும்.
- ★ நீர் கடத்தப்படும் பொறிமுறையை விளக்கும் மயிர்த்துளை விசைக்கொள்கை, வேரமுக்க கொள்கை என்பன சிறிய பூண்டுத் தாவரங்களுக்கு மட்டும் ஏற்புடையதால் இவை ஏற்றுக் கொள்ளப்படவில்லை.
- ★ காழின் ஊடாக நீர் ஒரு திசையில் மேல்நோக்கி மட்டுமே கடத்தப்படும்;

(நாளை தொடரும்)

### இன்று ஒரு தகவல்

# மருத்துவரிடம் உண்மை கூறவேண்டியது அவசியம்

வக்கீலிடமும்வைத்தியரிடமும் பொய் சொல்லக் கூடாது என்று சொல்வதுண்டு. வக்கீலிடம் பொய் சொன்னால் வழக்கு பலவீனமாகிவிடும். வைத்தியரிடம் பொய் சொன்னால உடம்பு பாதிப்படையும் ஒருவர் பொய் சொல்-திலகிலலாடியாக இருக்கலாம். இருந்தாலும் அவரின் உடலில் ஒரு கோளாறு வந்து டாக்டரிடம் காட்டவேண்டிய நிலையிலிருந்தால், அவரும் உண்மையைத்தான் பேசியாக வேண்டும். இல்லை என்றால் அது அவரின் உடம்புக்குத்தான் இடைஞ்சல், ஒரு பெரிய திருடன், திருடுவது, பொய் சொல்கிறது இரண்டும் தான் அவனுககு கைவந்த கலை. அவனுக்கு வயிற்று வலி வந்துவிட்டது. உடனே ஒருடாக்டரிடம் வந்தான். வயிற்றை வலிக்கிறது என்றான்.

''உனக்குக் குடிக்கிற பழக்கம் உண்டா?'' என்று கேட்டார் டாக்டர். 'அதெல்லாம் இல்லை'டாக்டர்என்று பொய் சொன்னான்ஆனால்டாக்டர் உண்மையைக் கண்டு பிடித்துவிட்டார். அதன்பின் அவனுக்குப் புத்திமதி சொன்னார். ''இதோபாரப்பா, உன்னுடைய தொழில் தர்மப்படி நீ பொலிஸாரிடம் பொய் சொல்லித் தப்பித்துக் கொள்ள நினைக்கலாம். ஆனால் டாக்டரிடம் பொய் சொன்னால் உனக்குத் தான் இடைஞ்சல்;'' என்றார். ஆனால ஒரு விஷயம், பொலிஸிடம் பொய் சொன்னாலும் உடம்பு தாங்காது டாக்டரிடம் பொய் சொன்னாலும் உடம்பு தாங்காது.

ஒரு டாக்டரிடம் ஒரு நோயாளிபோகும்போது எப்படிப் போகவேண்டுமஎன்கிறதைப் பற்றி. அந்தத் திருடனுக்கும். அங்கேயிருந்த மற்றவர்களுக்கும் அறிவுரை வழங்க ஆரம்பித்தார் டாக்டர்''முதற்றடவையாகடாக்டரிடம போகிறபோது உங்கள் பெயர், முகவரியையெல்லாம் தெளிவாகச் சொல்லிவிடவேண்டும. விருந்தாளியைக் கடைத்தெருவில் பார்த்தால் கொடுக்கிற மாதிரி இல்லாதவிலாசத்தைக் கொடுத்துவிடக் கூடாது உதாரணமாக உங்களுக்கு வயிற்று வலி வருகிறது. ஒரு டாக்டரிடம் போகிறீர்கள மருந்து சாப்பிடுகிறீர்கள். சரியாக வரவே உடனே இன்னொருடாக்டரிடம் போகிறீர்கள். அப்போது அவரிடம முன்பு பார்த்த டாக்டர் சாப்பிட்ட மருந்து விபரம் எல்லாவற்றையும் மறைக்காமல் சொல்லிவிடவேண்டும். அப்போதுதான் மேற்கொண்டு சிகிச்சையளிப்பதற்கு வசதியாக இருக்கும் பழையமருந்துச் சீட்டு, வைத்திய அறிக்கைகள் ஏதாவது இருந்தால் மறக்காமல் எடுத்துக் கொண்டு போகவேண்டும். ஆறுமாதத்துக்கு முன்னர் எடுத்த எக்ஸ்ரே தானே அது இப்போதுளதற்கு என்று நீங்கள நினைக்கலாம், வியாதியின் ஆரம்ப நிலையைத் தெரிந்து கொள்வதற்கு டாக்டருக்கு அது உதவியாக இருக்கும்;

குடிப்பழக்கம், புகையிலை போடுவது, போதை மருந்து போன்ற பழக்கமிருந்தால் மறைக்காமல் சொல்லி விட வேண்டும் டாக்டர் என்ன உங்கள்மேல்வழக்காபோடப் போகிறார்? அதிகமாக கோப்பி குடிக்கிற பழக்கம் இருந்தால் கூட சொல்லிவிட வேண்டும் டாக்டர் மருந்துச் சீட்டில் என்ன எழுதிக் கொடுக்கிறாரே, அதை அப்படியே வாங்க வேண்டும். மருந்துக்கடைக்காரரிடம் சீட்டைக் கொடுத்து விட்டு ''அந்த முதல் மாததிரையில் ஆறு குறையுங்கள் இரண்டாவது மாத்திரையில் எட்டுக் கூட்டுங்கள்'' என்று உங்கள் இஷ்டத்துக்குச் சொல்லிக் கொண்டிருக்கக் கூடாது

கொஞ்சம் மருந்து சாப்பிட்டதும் உடம்பு சரியானது மாதிரி தெரியும் உடனே சிலர் மருந்து சாப்பிடுவதை நிறுத்தி விடுவார்கள்; அது மிகவும் தவறு நோயை எதிர்த்துப் போராடுகிற செல் 'வளர்ச்சி இதனால் பாதிக்கப்படும் அதனால். டாக்டர் எதுவரைக்கும் சாப்பிடச் சொல்கிறாரோ அதுவரையும் சாப்பிட்டு விட்டுத்தான் மருந்தை நிறுத்த வேண்டும்.

சில சமயம் மருந்துக்கடைக்காரருக்கு டாக்டரின் கையெழுத்து புரியாமல் போகலாம். அதனால் மருந்து மாறிவிடும். கடையில் மருந்து வாங்கியபின் டாக்டரிடம் காட்டி சரிபார்த்துக் கொண்டால் மிகவும் நல்லது.

சிலசமயம் டாக்டரே-நீங்கள் மருந்து சாப்பிடுவதை பாதியில் நிறுத்தச் சொல்லலாம் உடனே நிறுத்தி விட வேண்டும். மிச்சம் மீதி மாத்திரைகள் இருந்தால் அவற்றை வீட்டில் வைக்காதீர்கள் குழந்தைகள் கண்ணில் பட்டால் மிட்டாய்என்று எடுத்து வாயில் போட்டுக் கொள்ளக் கூடும். அதன்பின்னர், அதற்கும் டாக்டரைத் தேடவேண்டியிருக்கும்.

உங்கள் இரத்தவகை என்ன வென்று உங்களுக்கு எப்போதும் தெரிந்திருக்க வேண்டும். அதையும் உங்கள் டாக்டரிடம் சொல்ல முடிந்தால் மிகவும் வசதியாக இருக்கும். இவ்வளவு புத்திமதிகளையும் அந்த டாக்டர் சொன்னார். அந்தத் திருடனும் மற்றவர்களும் அக்கறையாகக் கேட்டுக் கொண்டார்கள். டாக்டர் மறுபடியும் அந்தத் திருடனைப் பார்த்து 'இப்போது சொல்லு உன்மனதில் உள்ளதை மறைக்காமல் சொல். அதுதான் உனக்கு நல்லது என்னிடம் சொல்வதற்கு நீ தயங்கவேண்டிய அவசியமே இல்லை. உண்மைபேசு' என்றார்.

அந்தத் திருடன் தயங்கிக் கொண்டே 'டாக்டர் உங்கள் ஃபீசை கூடுமானவரைக்கும் குறைத்துப்போடுங்கள், அதுதான் உங்களுக்கு நல்லது என்றான் டாக்டர் திகைத்துப்போய்' ஏன் அப்படிச் சொல்கிறாய்' என்றார் இவன் மெதுவாக 'ஏனென்றால் நீங்கள் சொல்கிற தொகையை இன்று இரவு உங்கள் வீட்டில்தான் நான் எடுக்க வேண்டும்' என்றான். டாக்டரிடம்பொய் சொல்லக் கூடாது என்பதற்காகவா இப்படி?□

**தென்கச்சி கோ.சுவாமிநாதன்**

# மாணவர்களுக்கான சீருடைகள்

# மிக விரைவில் வழங்க ஏற்பாடு

## கலாநிதி தணிகாசலம்பிள்ளை தெரிவிப்பு

[யாழ்ப்பாணம்]

யாழ். மாவட்ட மாணவர்களுக்கான இலவச சீருடை மிக விரைவில் வழங்கப்படுமென மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் கலாநிதி எஸ். என். தணிகாசலம் பிள்ளை தெரிவித்துள்ளார்.

மாணவர்களுக்கு சீருடை வழங்குவதற்கான ஏற்பாடுகள் துரிதகதியில் மேற்கொள்ளப்படுவதாகவும் கடந்த வருடங்களில் சீருடைவழங்குவதில் ஏற்பட்ட காலதாமதம் தவிர்க்கப் படுவது அவசியம் எனவும் தெரிவித்த கலாநிதி தணிகாசலம் பிள்ளை,

சீருடையை விரைவு படுத்தி வழங்குவதற்கு அதிபர்கள் பூரண ஒத்துழைப்பு வழங்க வேண்டுமெனவும் கேட்டுக் கொண்டார்.

இதேவேளை கொழும்பிலிருந்து இச் சீருடைகளைப் பெறுவதற்கான பாதுகாப்பு அனுமதியையும் பிற ஒழுங்குகளையும் அமைச்சர் டகளஸ் தேவானந்தா மேற் கொண்டிருந்தார் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. [ந]

## ஊனமுற்றோர் தினம்

(யாழ்ப்பாணம்)

பகவான் ஸ்ரீசத்திய சாயி பாபாவினால் பிரகடனப் படுத்தப்பட்டுள்ள ஊனமுற்றோர்தின நிகழ்வுகள் நாளை ஞாயிறுகாலை 9-00 மணி முதல் யாழ் பகவான் ஸ்ரீசத்தியசாயி சேவா நிலையத்தில் நடைபெறவுள்ளன. அன்றைய தினம் ஊனமுற்றோர்க்கு அன்பளிப்புகள் வழங்கப்படுவதுடன் நண்பகல்நாராயண சேவையும் இடம் பெறும். (உ-104)

## துப்பாக்கிச்சூட்டில் 4 பெண் ஊர்காவற்படையினர் பலி

### வவுனியாவில் சம்பவம்

[வவுனியா]

வவுனியா சிதம்பரபுர பகுதியில் இனந் தெரியாதோர் நடத்திய துப்பாக்கிப் பிரயோகத்தில் நான்கு பெண் ஊர்காவற் படையினர் கொல்லப்பட்டுள்ளனர்.

நேற்று முன்தினம் மாலை இடம்பெற்ற இச்சம்பவத்தில் காவல் கடமையின் பொருட்டு சைக்கிளில் சென்று கொண்டிருந்த போதே இந் நான்கு பேரும் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர்.

சுட்டுக் கொல்லப்பட்ட நால்வரினதும் சடலங்கள் வவுனியா வைத்திய சாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளன. [ந-5]

## யாழ்ப்பாண யுவதி விடுதலை

(கொழும்பு)

சட்டவிரோதமாக வெளிநாட்டுக்கு செல்ல முற்பட்டதாகக் குற்றம் சாட்டப் பட்டு கடந்த ஐந்து மாதங்களாக நீர் கொழும்புச் சிறையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த யாழ்பபாணத்தைச் சேர்ந்த யுவதியொருவர் நீர்கொழும்பு நீதவானால் விடுதலை செய்யப்பட்டார்.

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த எஸ் துவாரகா என்ற யுவதியே விடுவிக்கப்பட்டவராவார். (இ)

## யாழ். பல்கலை திறக்கும் வரை போராட்டம் தொடரும்

### மட்டு.பல்கலை மாணவர் அறிவிப்பு

(மட்டக்களப்பு)

யாழ் பல்கலைக்கழக விஞ்ஞான பீட மாணவன் கிருஷ்ணசாமி திவ்வியன் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்ட போதும், யாழ் பல்கலைக்கழகம் இன்னமும்திறக்கப்படவில்லை இந்நிலையில் யாழ் பல்கலைக்கழகத்தை திறக்கும் வரை தமது சாத்வீகப் போராட்டம் தொடருமென்று கிழக்கு பல்கலைக் கழக மாணவர் ஒன்றியம் அறிவித்துள்ளது.

இதுசம்பந்தமாக கிழக்கு பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் நேற்றுமுன்தினம் வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது.

மாணவர்களின் கல்விச் செயற்பாடுகள் பாதிக்கப்படாதவாறு யாழ் பல்கலைக் கழகம் மீண்டும் திறக்கப்படும் வரை அரசுக்கு அழுத்தம் கொடுக்கவும் அரசின் அராஜகத்தைக் கண்டித்தும் சாத்வீகப் போராட்டத்தில் ஈடுபடவுள்ளோம்.

இப்போராட்டத்துக்கு, பாடசாலைமாணவர்கள், மற்றும் உயர் கல்வி நிறுவன மாணவர்களும் ஆதரவு வழங்க வேண்டும். (இ)

## வடமராட்சியில் பாதுகாப்புக் கெடுபிடி

(வடமராட்சி)

வடமராட்சிப் பகுதியில் கடந்த சில தினங்களாக இராணுவத்தினரின் கெடுபிடிகள் அதிகரித்துள்ளன.

பருத்தித்துறை, நெல்லியடி. வல்வெட்டித்துறை ஆகிய பகுதிகளில் வீதிகளில் பிரயாணம் செய்பவர்களை வழிமறித்து தீவிர சோதனைக்கு உட்படுத்துவதாகவும் இதன் போது பொதுமக்கள் பல அசௌகரியங்களை அனுபவிக்க வேண்டி வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மோட்டார் சைக்கிள் படையினரே இவ்வாறு நடந்து கொள்வதாகத் தெரியவருகிறது. (ம41)

## அபிவிருத்தியா, அழிவா; சிந்தித்துச் செயற்படுங்கள்

### நிதி ஒதுக்கீட்டு கூட்டத்தில் டக்ளஸ்

(யாழ்ப்பாணம்)

அபிவிருத்தியையா, அழிவையா நோக்கிச் செல்லப் போகிறீர்கள் என்பதை தீர்மானிக்கும் முக்கிய காலகட்டம் இது.

கடந்த புதன்கிழமை பாடசாலை அதிபர்கள, நிர்வாகிகள், சனசமூக நிலையப் பிரதிநிதிகள் ஆகியோர் மத்தியில் நிதி ஒதுக்கீடு சம்பந்தமான கலந்துரையாடல் ஒன்று அமைச்சர் டக்ளஸ் ஏற்பாட்டில் இடம்பெற்றபோது அதில் உரையாற்றுகையில் அமைச்சர் இவ்வாறு குறிப்பிட்டார்.

தொடர்ந்து உரைநிகழ்த்துகையில்,

உங்கள் எதிர்காலத்தை ஒளிமயமானதாக்க நாம் சகல முயற்சிகளையும் மேற்கொண்டு உழைந்து வருகின்றோம். நீங்கள் மௌனத்தைக்கலைத்து அழிவை தடுத்து நிறுத்திட முன்வாருங்கள் என்று குறிப்பிட்டார்.

இக் கருத்தரங்கில் யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களான வி. கே. குகேந்திரன் (ஜெகன்) எஸ். சிவதாசன் ஆகியோருடன் ஈ. பி. டி. பியின் பிரதேச சபைத்தலைவர்கள் வடக்கு புனர்வாழ்வு. புனரமைப்பு அதிகாரசபை அதிகாரிகள் ஆகியோருடன்,

பொது அமைப்புக்களின் பிரதிநிதிகளாக 500 க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டு அழிவை நோக்கிய பாதையினை தடுத்துநிறுத்தி அமைதி சமாதானத்தைக் கொண்டுவருமாறு அமைச்சரிடம் ஒரே குரலில் வேண்டுகோள் விடுத்தனர். (உ)

## உரும்பிராய் இந்துவில் முத்தமிழ்விழா

(யாழ்ப்பாணம்)

உரும்பிராய்இந்துக்கல்லூரியின் முத்தமிழ்விழா இன்று முற்பகல் 9.00 மணிக்கு கல்லூரியின் பிரார்த்தனை மண்டபத்தில் தமிழ்மன்றத் தலைவர் செல்வன் ஜெ. லெபோறென்ஸ் தலைமையில் இடம்பெறவுள்ளது இந்நிகழ்வில் கல்லூரிமுதல்வர் அ ஈஸ்வரநாதன் வாழ்த்துரை வழங்குவார்.

பிரதமவிருந்தினராக தமிழ் உதவிக்கல்விப் பணிப்பாளர் எம்எஸ் ஸ்ரீதயாளனும்சிறப்பு விருந்தினராககோப்பாய்கோட்ட உதவிக்கல்விப்பணிப்பாளர்இ சிவஞானசுந்தரமும் முதன்மைஆசிரியர் செ.விசுவலிங்கம் ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர். (உ)

## புத்தூக்கக் கண்காட்சி

(புலோலி)

கரவெட்டி ஞானாசாரியார் கல்லூரியில் புது யுகத்திற்கான புத்தூக்கக் கண் காட்சி அதிபர் ஆர். சிவசிதம்பரம் தலைமையில் நடைபெற்றது.

இக் கண்காட்சியை யாழ். பல்கலைக்கழக பேரவை உறுப்பினரும் பருத்தித்துறை சட்டத்தரணிகள சங்கத் தலைவருமான ஆர். உருத்திரா சம்பிரதாய பூர்வமாக நாடாவை வெட்டித் திறந்து வைத்தார்.

விழாவிலே வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் எஸ். சிவராஜா, வலயப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் வி ரி. செல்வரத்தினம் உட்பட இன்னும் பலர் கலந்து கொண்டு உரையாற்றினர். (உ-52)

# இந்திய - பாகிஸ்தான் தலைவர்கள் மீண்டும் விரைவில் சந்திப்பார்

(இஸ்லாமபாத்)

மிக முக்கிய விடயங்களில் உடன்பாடு இந்தியாவுடன் காண முடியாவிட்டாலும் ஆக்ரா மாநாடு போன்று மேலும் சந்திப்புகள் தொடரும் என்று பாகிஸ்தான் அதிபர் ஜெனரல்முஷாரப் தெரிவித்தார்

மந்திரிகள் மற்றும் கல்விமான்கள் அடங்கிய கூட்டத்தில் தடைப்பட்ட ஆக்ரா மாநாடு பற்றிக் கருத்துத் தெரிவிக்கையில் மேற்கண்டவாறு அவர் தெரிவித்தார்.

இந்தியப் பிரதமருடன் தான் மேலும் பேச்சுவார்த்தைகள் நடத்த அழைப்பு விட்டிருப்பதாகவும் கூடிய விரைவில் காலம் குறிக்கப்படும் என்றும் மேலும் அவர் தெரிவித்தார்.

கடந்த திங்கட் கிழமை ஆக்ரா மாநாடு பற்றிய கூட்டறிக்கை தயாரிப்பில ஏற்பட்ட இழுபறி பல பேச்சுக்களைத் தொடர முடியாது பின்னடைவு ஏற்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (து)

## 45 பேர் பலி

(புதுடில்லி)

இந்தியாவின ஒரிஸா மாநிலத்தில் ஏற்பட்டுள்ள வெள்ளப் பெருக்கினால் இதுவரை 45 பேர் பலியாகியுள்ளனர்

கடந்த ஒருவாரமாக இடம்பெற்று வரும் பெருமழையினால் 50 லட்சம் மக்கள் பாதிப்படைந்துள்ளனர் எனவும் தெரிவிக்கப்படுகிறது. (உ-7)

## இந்தியாவுக்கு அமெரிக்காவின் ஆயுத விற்பனை

(புதுடில்லி)

பொருளாதாரத் தடை விதித்த அமெரிக்கா இந்தியாவில் பரிவு கொண்டு ஆயுதவிற்பனைக்கு வந்திருக்கிறது என்று நோக்கர்கள் வினா எழுப்பியுள்ளனர்.

இந்தியா அணுச்சோதனை நடத்தியபோது அமெரிக்கா இந்தியாமீது பொருளாதாரத்தடை விதித்திருந்தது அதேவேளை சீனாவுடன் சிறிது நட்புக்கொள்ள முயன்றது

அணுச்சோதனை வளர்ச்சிக்காக மட்டுமென்று எத்தனையோ முறை இந்தியா எடுத்துக்கூறியும் அமெரிக்கா நம்பவில்லை

முன்பு அதிபராக இருந்த பில்கிளின்டன் இந்தியாவிற்கு வந்தார். இந்தியப் பிரதமர் மூட்டு அறுவைச்சிகிச்சைக்கு அமெரிக்கா சென்றார். அமெரிக்கா விதித்திருந்த பொருளாதாரத் தடையை ஓரளவு நீக்கியது.

இப்பொழுது அமெரிக்கா விற்கும் சீனாவிற்குமிடையில் தாய்வான் விடயத்தில் முறுகல்நிலை தொடர்கிறது.

யுத்தகளபாடங்கள் விற்பதற்கு அமெரிக்கக் கூட்டுத் தளபதிகளின் தலைவர் செல்ரன் புதுடில்லி வந்துள்ளார்.

இந்தியப் பொருளாதாரத் தடை நீக்கவா சீனாவிற்கு ஆத்திரமூட்டவா என அரசியல் நோக்கர்கள் கருதுகிறார்கள். (து)

## காஷ்மீரில் பரவலாக வன்முறைகள் வெடிப்பு

(ஸ்ரீநகர்)

காஷ்மீரில புதிதாக வெடித்துள்ள வன்முறைகளால் 2 இந்தியப் படையினரும் 6 தீவிரவாதிகளும் காயமடைந்துள்ளனர்.

இதேவேளை, ஸ்ரீ நகரில் மற்றுமோர் மோதலில் ஒரு படைவீரரும் 4 தீவிரவாதிகளும் பலியாகியிருக்கலாம் எனத் தெரிவித்த போதிலும் உண்மை நிலை அறியப்படவில்லை.

ஆக்ராவில் இடம்பெற்ற உச்சி மாநாடு வெற்றியளிக்காமல் போனதே காஷ்மீரில் புதிய வன்முறைகள் வெடிப்பதற்கு காரணம் என்று தெரிவிக்கப்படுகிறது. (உ-7)

## இந்தோனேஷியாவில் அவசரகால நிலைப்பிரகடனம் 30ம் திகதி அமுல்

(ஜகார்த்தா)

இந்தோனேஷிய அதிபர் அப்துல்ரஹ்மான்வாஹிட்டுக்கும் மக்கள் அவைக்கும் இடையில் சமாதானப் பேச்சுகள் நடைபெறுகின்றன.

சமாதானப் பேச்சுகள் தோல்வியடையும் பட்சத்தில் வருகின்ற 30 ஆம் திகதி தொடக்கம் அவசர கால நிலை அமுலுக்கு வருமென்று அதிபர் வஹிட் கூறியுள்ளார்.

சமாதானப் பேச்சுகளுக்காக மக்களவை அங்கத்தவர்கள் ஜகார்த்தா வந்துள்ளனர்.

நாட்டின் முக்கியபொறுப்புகளை உபஜனாதிபதி மெகவதியிடம் ஒப்படைக்க வேண்டும் என்றும் வாஹிட் மீதான குற்றங்களை நீக்குவதாகவும், பெரும்பான்மையினர் கருதுவதாகவும் இதேவேளை உப ஜனாதிபதி அதனை ஏற்கமறுத்து வருவதாகவும் உறுதிப்படுத்தப்படாத செய்திகள் தெரிவிக்கின்றன.

இரண்டொரு தினங்களில் சமாதான உடன்பாடு ஏற்பட்டு விடுமென்று அரசாங்க அறிவித்தலொன்று தெரிவிக்கிறது (து)

## இல. செல்ல வேண்டாம் அமெரிக்கருக்கு கோரிக்கை

(அமெரிக்கா)

அமெரிக்கப் பிரஜைகள் எவரும் தற்சமயம் இலங்கைக்குச் செல்ல வேண்டாமென அமெரிக்க வெளிவிவகார அமைச்சு கோரியுள்ளது.

இலங்கையில் தற்பொழுது நிலவும் அரசியல் ஸ்திரமின்மை காரணமாக இலங்கை செல்லும் அமெரிக்கர்கள் பாதிப்படைய நேரிடும். இதனால் இலங்கைக்கு விஜயம் செய்வதை தவிர்த்துக் கொள்ளுமாறு கோரப்பட்டுள்ளது. (உ-5)

## பாரந்தூக்கி வீழ்ந்ததில் 36 பேர் உயிரிழப்பு

(பீக்கிங்)

சீனாவின் ஷங்காயில் 600 தொன் எடையுள்ள பாரந்தூக்கி வீழ்ந்ததில் 30பேர் உயிரிழந்துள்ளனர்

கடந்த செவ்வாய்க்கிழமை ஹாங்கொங் கப்பல்கட்டும் கம்பனி ஊழியர்கள் மீதே இப்பாரம்தூக்கி வீழ்ந்துள்ளது.

வீழ்ந்த பாரம்தூக்கியினுள் மேலும்4பேர் சிக்குண்டிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (உ-3)

## ஜி - 8 நாடுகளின் மாநாடு நேற்று இத்தாலியில் ஆரம்பம்

(ஜெனீவா)

ஜி-8 எட்டு நாடுகளின்உச்சி மாநாடு இத்தாலியிலுள்ள ஜெனோவாவில் இன்று ஆரம்பமாகவுள்ளது.

இம்மாநாட்டில் ஜி-8 நாடுகளின் வெளியுறவு அமைச்சர்கள் கலந்து கொள்வார்கள்.

உலகிலே தொழில் துறையில் முன்னேறியுள்ள இந்த நாடுகளின் பிரதி நிதிகள் மேற்காசிய நிலைமை பற்றியும் மசிடோனியா நிலை பற்றியும் ஏற்கனவே ஆராய்ந்துள்ளனர். [து]

## உலக தரிசனம்

### உதட்டுச் சாயம் பூசவும் தடை

(காபூல்)

ஆப்கானிஸ்தானில் ஆளும் தலிபான் அமைப்பினர் புதிதாக மேலும் இரு கடும் சட்டங்களை அமுலபடுத்தியுள்ளனர்.

வானொலி, கேட்டல் தொலைக்காட்சி பார்த்தல் கணனிகள் பயன்படுத்தல் போன்ற 30 விடயங்களுக்கு தடைவிதித்துள்ள தலிபான் அமைப்பினர் உதட்டுச் சாயம் பூசுதல், சீட்டாடுதல், போன்றவற்றையும் மேலதிகமாகத் தடை செய்துள்ளதாக அறிவித்துள்ளனர்.

இச்சட்டத்தை மீறுவோர் கடுந்தண்டனைக்குள்ளாக்கப்படுவர் என்றும் தெரிவித்துள்ளனர். (உ-7)

## அமெ. யுத்த விமானம் வீழ்ந்து நொருங்கியது துருக்கியில் சம்பவம்

(துருக்கி)

அமெரிக்காவின் யுத்த விமானமொன்று துருக்கியில் வீழ்ந்து நொருங்கியுள்ளது.

ஈராக்கின் வான் எல்லையில் பறந்து கொண்டிருக்கையிலேயே அந்த விமானம்இயந்திரக் கோளாறு காரணமாக வீழ்ந்து நொருங்கியுள்ளது.

எனினும் மேற்படிவிமானம் ஈராக்கியர்களால் சுட்டுவீழ்த்தப்பட்டதென்று உறுதிப்படுத்தப்படாத செய்திகள் தெரிவிக்கின்றன.

இதேவேளைஇயந்திரம்பழுதானதும் விமானி ஒருவர் பரசூ மூலம் குதித்து தப்பினார் என்றும் தெரிவிக்கப்படுகிறது (து)

## செய்திப்பரல்

★ முன்னாள் பெரு ஜனாதிபதி பியூஜிமோரியின் வைத்து வருகை. ஜப்பானிய பிரஜாவுரிமை வழங்கப்பட்டுள்ளது.

★ மெக்ஸிக்கோ ஜனாதிபதி வின்சன்ட் பொக்ஸ் தனது பேச்சாளராக இருந்த பெண்ணை சிவில் வைபவம் ஒன்றில் வைத்து திருமணம் செய்துள்ளார்.

★ 2000 தேள்களுடன் கண்ணாடிக் கூடு ஒன்றில் 24 வயதான மலேசியப் பெண் மலேனா ஒரு மாதம் இருந்து சாதனை படைக்க முன்வந்துள்ளார்.

★ கலிபோர்னியாவில் எவ்- 6ரக யுத்தவிமானம் விபத்துக்குள்ளானதில் இரு அமெரிக்க விமானிகள் பலியாகியுள்ளனர்

★ பெத்தலஹேமில் இஸ்ரேல் மேற்கொண்ட ஹெலிக்தாக்குதலில் 4 பலஸ்தீனர்கள் கொல்லப்பட்டுள்ளனர். (உ-3)

## கரிபியன் கடலில் படகு விபத்து 6 பேர் பலி

(மியாமி)

சட்டவிரோத குடியேற்றக்காரர்கள் பயணம் செய்த படகு ஒன்று கரிபியன் கடலில் கவிழ்ந்ததால் 6 பேர்பலியாகியுள்ளதுடன் ஒருவர் காணாமற் போயுள்ளார்

மெக்ஸிக்கோவிலிருந்து சட்ட விரோத குடியேற்றக்காரர்களை அமெரிக்கா நோக்கி ஏற்றிச்சென்ற படகே கவிழ்ந்துள்ளது.

வேர்ஜின் தீவுக்கு அண்மையில் படகு சென்றபோது படகினுள் நீர் உட்சென்றமையினால் படகு கவிழ்ந்துள்ளது.

27 பேர் பயணம் செய்த மேற்படி படகிலிருந்து 20 பேர் காப்பாற்றபபட்டுள்ளனர். [உ-3]

## முடிவு பிரதமர் கையில்

(சென்னை)

பாட்டாளிகள் மக்கள் கட்சியை தேசிய ஜனநாயகக் கூட்டணியில் சேர்ப்பது பற்றியமுடிவை பிரதமர் வாஜ்பாய் எடுப்பார் என்று தமிழ் பாரதிய ஜனதாக கட்சித் செயலாளர் இல கணேஷன் தெரிவித்தார்.

திருச்சியில் செய்தியாளர் மத்தியில் இல கணேஷன் மேலும் கூறுகையில்; திமுக தலைவர் மு கருணாநிதியும் பிரதமர் வாஜ்பாயும் கூடி பாட்டாளிகள் மக்கள் கட்சியை மீண்டும் சேர்ப்பது பற்றி முடிவு எடுப்பார்கள் என்று தெரிவித்தார். (து)

## அமெரிக்காவின் ஏவுகணைத் திட்டத்திற்கு இத்தாலி ஆதரவு வழங்கும்

(வாஷிங்டன்)

அமெரிக்காவின் ஏவுகணைத் திட்டத்திற்கு ஒத்துழைப்பு வழங்குவதற்கு இத்தாலி இணக்கம் தெரிவித்துள்ளது.

மேற்படி திட்டத்திற்கு ஒத்துழைப்பு வழங்க இணக்கம் தெரிவித்த முதல் ஐரோப்பிய நாடு இத்தாலி என்பது குறிப்பிடத்தக்கது.

வேறு ஐரோப்பிய நாடுகள் சில இத்திட்டத்திற்கு ஆதரவு வழங்குவது தொடர்பாக ஆராய்ந்து வருவதாகவும் தெரியவந்துள்ளது. (உ-7)

## வியக்க வைக்கும் விந்தை நிகழ்வுகள்

### ★ ஒட்டிப் பிறந்த முதலைக் குட்டி

மனிதர்களில் ஒட்டிப் பிறந்த இரட்டையர்கள் பிறப்பது அறிந்தது தான் ஆனால் முதலை ஒன்று (இரண்டு) இவ்வாறு ஒட்டிப் பிறந்துள்ளதென அறிவிக்கப்பட்டுள்ளது.

26 6 2001 அன்று சமட்பிராக்கன் Sumut Prakan) என்ற முதலைகள் பண்ணையிலேயே இந்த அதிசயம் நிகழ்ந்துள்ளது.

இம்முதலைக்குட்டி தலையிலிருந்து இடுப்புப் பகுதி வரைஒட்டிப் பிறந்துள்ளதாம் ஓர் உடம்புடன் காணப்படும் இம்முதலைக் குட்டிக்குத் தலைகள் மட்டும் இரண்டு.

### ★ புதிய வகைப் புகையிரதம்

பிரான்ஸில் ஓடும் புகையிரதங்களில வித்தியாசமான தொழில்நுட்பம் கையாளப்பட்டு வருகிறதாம்.

இப்புகையிரதங்கள் புறப்படத் தொடங்கியதும் அதன் கதவுகள் தாமாகவே தாழிட்டுக்கொள்ளுமாம். அத்துடன்திருட்டுத்தனமாக புகையிரதத்தில்ஏறாதிருப்பதற்கும் பிரயாணிகள் முழுவதும் ஏறிக் கொண்டு விட்டார்களா என அவதானிப்பதற்கும் ஓட்டுநரின் முன்பாக டெலிவிஷன் பொருத்தப்பட்டிருக்குமாம்.

அவதானி

எதிரதாக் காக்கும் அறிவினார்க்(கு) இல்லை அதிர வருவதோர் நோய்.

குறள்

# வலம்புரி

## அனுராவின் பயணம்

இலங்கை அரசியலுக்கு இப்போது அட்டமத்துச் சனி. ஆட்சியிலிருக்கும் பொதுஜன ஐக்கிய முன்னணிக்கும், ஐக்கிய தேசியக் கட்சிக்குமிடையில் பெரும்மோதல் தொடங்கியுள்ளது. 1983 ஜூலையில் நடந்த இனக்கலவரத்தின் பழி 18 வருடங்களின் பின் ஜூலை மாதத்திலேயே சூழத் தொடங்கியுள்ளதாக நேற்று இப்பகுதியில் எழுதியிருந்தோம். அதி உத்தம ஜனாதிபதியாக இருந்த ஜே. ஆர். ஜயவர்த்தனா தயாரித்த அரசியலமைப்புக் கோட்டையிலிருந்து ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா ஆட்சி நடத்துவதும் ஐக்கிய தேசியக் கட்சியின் பாவ பழிகளில் ஒன்றே.

இவற்றைத்தான் போகட்டுமேயென்று விட்டாலும், சபாநாயகராக இருக்கும் அனுரா பண்டார நாயக்கா ஐக்கிய தேசியக்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர். அதே வேளை ஜனாதிபதியின் உடன் பிறந்த சகோதரர். இந்நிலையில் ஐக்கிய தேசியக கட்சிக்கும், பொதுஜன ஐக்கிய முன்னணிக்கும் பொதுவானவர் என்ற அடிப்படையில் இரு தரப்பும் ஏகமனதாக ஏற்றுக் கொண்டே அனுரா சபாநாயகராகப் பதவி ஏற்றார்.

அவர் சபாநாயகராகப் பதவியேற்ற போது, ஐக்கிய தேசியக் கட்சிக்கு நெருக்கமானவராகவும், பொது ஜன ஐகிய முன்னணிக்கு (சந்திரிகாவுடனான இரத்த உறவைத் தவிர) கடும் பகைவராகவுமே இருந்தார்.

இதனால சகோதரன் அனுராவைக் கொண்டே ஜனாதிபதிக்குப் பாடம் புகட்டலாமென ஐக்கிய தேசியக் கட்சி நம்பியிருந்தது. எனினும், ஐக்கிய தேசியக்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினராக இருந்த போது ஜனாதிபதியைக் கடும்பாட்டில் தூற்றிய அனுரா சபாநாயகர் ஆசனத்தில் அமர்ந்தவுடன், தான் நடுநிலையோடு நடந்து கொள்ள வேண்டுமென்ற சிந்தனை தோற்றம் பெற்றது. ஆயினும் அதற்கு மேலாக, தான் ஆடாவிட்டாலும் தன் தசை ஆடும் என்பது போல் தனது உடன் பிறந்த சகோதரியின் ஆட்சியைக் கவிழ்க்க ஐக்கிய தேசியக் கட்சி எடுத்துவரும் முயற்சிகளுக்கு துணைபோகக் கூடாதென்ற உணர்வும் அவரிடம் ஏற்பட்டது.

அதன் வெளிப்பாடே அவரின் வெளி நாட்டுப் பயணமாகும்.

# பௌர்ணமியாகப் பொலிந்த ஜெயலலிதா

# அமாவாசை ஆவதற்கு அதிக காலமில்லை

நேரு குடும்பம், மகாத்மா காந்தி மற்றும் தியாக மாமலைகளாக விளங்கிய சுதந்திர தியாகிகள் கட்டிக்காத்த இந்திய அரசியல் இன்று மத்தியிலும் சரி, சில மாநிலங்களிலும் சரி ஸ்திரமற்றதாகவே காணப்படுகின்றது. மத்தியில் கடந்த 10 ஆண்டு காலத்தில் நிலையான ஆட்சி ஏற்படவில்லை. இந்திராகாந்தி, ராஜீவ் காந்தி மறைவுக்குப் பின்னர் இந்நிலையே காணப்படுகின்றது. காங்கிரஸ் கட்சியை எதிர்த்த கம்யூனிஸ்டுகள் இன்று காங்கிரஸ்கட்சியை ஆதரிக்கின்றனர். இந்த நிலை இன்று தமிழகத்திலும் காணப்படுகின்றது.

### மூப்பனார்

தி.மு.கவுடன் கூட்டுச் சேர்ந்திருந்த அனைத்துக் கட்சிகளும் அ. தி. மு.க வில் சேர்ந்திருக்கின்றன. கூட்டுச் சேர்ந்தே இன்று தமிழகத்தை ஆட்சி செய்ய முடியுமென தி.மு.கவும் அ.தி.மு.கவும் கருதுகின்றன. அரசியல் அனுபவசாலியான மூப்பனார் ஜெயலலிதாவுடன் கூட்டுச் சேர்ந்ததற்காக எதிர் காலத்தில் வருத்தப்படுவார் என்பதற்கான அறிகுறிகள் இன்றைய தமிழக அரசியலில் காணப்படுகின்றன.

கலைஞர் கைது செய்யப்பட்ட போது அவருக்கு காவல்துறையினர் திட்டமிட்டு ஜெயலலிதாவின் ஆசியுடன் செய்த அட்டகாச அடாவடித்தனங்களால் இன்று அ.இ.தி.மு.க. கட்சியில் இணைந்துள்ள இதர கட்சிகள் மலைத்துப் போயிருக்கின்றன. கலைஞருக்கேற்பட்ட கதி எதிர்காலத்தில் தங்களுக்கும் மேற்பட்டு விடலாமென எண்ணுகின்றனர்.

### கவலை தெரிவிப்பு

கலைஞர் கைது செய்யப்பட்ட விதம் குறித்து மூப்பனார் ராமதாஸ் வீரமணி மற்றும் கம்யூனிஸ்டுகள் கவலை தெரிவித்து அறிக்கை விட்டனர். மத்திய அரசின் எதிர்ப்பு, மாநிலக்கட்சிகளின் எதிர்ப்பு என்பவற்றால் ஜெயலலிதா எதிர்பார்த்திராத அதிர்ச்சியைச் சந்தித்தார்.

தமிழக அரசியல் வரலாற்றில் மத்திய அமைச்சர்கள் மாநில அரசால் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டது இதுவே முதற் தடவையாகும்.

## புத்தொளி

மத்திய அரசின் உதவிக்கு காத்திருக்கும் ஒரு மாநில அரசு பின் விளைவுகளை சிந்திக்காது அவசரம் அவசரமாக எடுத்த நடவடிக்கைகளினால் காமராஜர், அண்ணா, எம்.ஜீ. ஆர் ஆட்சிக் காலத்திற்கும் ஜெயலலிதா ஆட்சிக் காலத்திற்குமுள்ள வேறுபாடுகளை மக்கள் சிந்திக்கத் தலைப்பட்டுள்ளனர்.

### கண்டனம்

மத்திய அரசும், பிரதமரும் கடும் கண்டன அறிக்கைகளை விட்டனர். தமிழக நீதிபதி ஒருவர் காவல்துறையினரைப்பார்த்து, 'உங்கள் இதயம் தசையினாலா அல்லது மண்ணினாலா செய்யப்பட்டது' என கேள்வி எழுப்பியிருந்தார். நீதிபதியின் ஆணையை அலட்சியம் செய்த காவல்துறையினரைக் கடுமையாக அவர் எச்சரித்தார். இன்று சட்டத்தையும் நீதிமன்றத்தையும் புறக்கணித்த ஒரே அரசு அ. தி.மு.க அரசு என்பதை இந்தியத் துணைக் கண்டமே ஏற்றுக்கொண்டுள்ளது. இன்றிருக்கும் இந்திய அரசியல் வாதிகளில் முதிர்ந்த அரசியல் அனுபவமுள்ள ஒரே ஒரு அரசியல் தலைவர் பிரதமர் வாஜ்பாயேயாவார், அவர் சமீபத்தில் நடந்த தமிழக சம்பவங்களை அறிந்து அதிர்ச்சியுற்றார். தமிழகத்தின் நடப்புநிலைமைகளை அவர் உணர்ச்சி பூர்வமாகக் கண்டித்தார். தேசிய ஜனநாயக கூட்டணி சார்பில் விசாரித்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு அதன் தலைவர்களைப்பணித்தார். உள்துறை அமைச்சு அதிகாரிகளும் தமிழகம் அனுப்பப்பட்டனர். சட்டத்தின் காவலர்களான காவல் துறையினர் தான்தோன்றித்தனமாக நடந்து கொண்டமை புலன் விசாரணையில் தெரியவந்தது.

மத்திய அரசும் தன்னுடன் கூட்டுச் சேர்ந்த அரசியல் கட்சிகளும் மௌனமாக இருப்பரென ஜெயலலிதா எதிர்பார்த்தாரா? முதிர்ந்த அரசியல் தலைவர், எழுபத்தெட்டு வயதை எட்டிய முதுமையாளர் ஒருவரை கைது செய்ய ஆணையிடும் போது பின் விளைவுகளை எதிர்பார்த்திருக்காத ஜெயலலிதாவின் அரசியல் நாகரிகம் சாணக்கியம் கேள்விக் குறியாகிவிட்டது மாத்திரமல்ல, மிகவும் மட்டமானது என்பதையும் சாட்டிவிட்டது.

மத்திய அரசியல் தி.மு.க. அமைச்சர்கள் அங்கம் வகிக்கும் வரை ஜெயலலிதாவுக்கு ஆபத்தென்பதை அனைவரும் அறிவர். தான் பெற்ற வெற்றியை மதித்து, கடந்த காலத்தை மறந்து நல்லாட்சி தரும் நடவடிக்கைகளை அவர் எடுக்கவேண்டியதே இன்றைய தேவையாகும்.

தி.மு.க வினர் ஆரம்பத்தில் எத்தனையோ முறை கைது செய்யப்பட்டனர். காவலில் வைக்கப்பட்டனர். சிறைவாசமும் அனுபவித்தனர். ஊழல் செய்பவர்களுக்கு என்ன தண்டனை மக்களால் கிடைக்குமென்பதை அவர்களது ஆட்சிக் காலத்தில் மக்கள் ஜெயலலிதாவை தோல்வியுறச் செய்ததன் மூலம் அறிந்துள்ளனர்.

### பழிவாங்கும் நோக்கம்

முன்னாள் முதலமைச்சரை அவர்மேல் உள்ள குற்றச்சாட்டுக்கள் நீதி மன்றத்தில் தாக்கல் செய்திருந்தால் அவர் தாமாகவே முன் வந்து நீதி மன்றத்தில் தோன்றியிருப்பார். "எந்த வழக்கையும் சந்திக்கத் தயாராக இருக்கிறேன்" என ஏற்கனவே கருணாநிதி கூறிவிட்டார். கலைஞர், அவர் மகன் ஸ்டாலின், அழகிரி, மனைவி, மகள் என அனைவரையும் சிறையிலடைத்ததிலிருந்து ஜெயலலிதா பழிவாங்கும் நோக்கில் தான் இதனைச் செய்திருக்கிறார் என்பது புலனாகின்றது.

ஜெயலலிதாவை தமிழ் மக்கள் நன்கு அறிவர் இனியாயினும் நல்லமுறையில் செயற்படுவாரென எண்ணி வாக்களித்த தமிழ் மக்கள் இப்போது ஏமாந்துவிட்டனர் என்று அடித்துக் கூறலாம். □

## பொறுப்பு வாய்ந்தவர்கள் தமது

# கடமைகளைத் தட்டிக்கழித்தால் சமூகம் சீரழிவதைத் தடுக்க இயலாது

### காவலூர் பிரதேச செயலர் உரை

(ஈச்சமோட்டை)

மனித முன்னேற்ற மேம்பாட்டில் சிறுவர்களின் ஆரம்பச் செயற்பாடுகள் ஒவ்வொன்றும் மிக முக்கியமானவைகளாகும். இதற்கேற்ற வகையில் அவர்களை வளர்த்தெடுக்க வேண்டும். இதை பொறுப்புடையவர்கள் தட்டிக்கழித்து செயற்பட்டால் சமூகம் சீரழிந்து போவதை எவராலும் தடுக்க முடியாது.

இவ்வாறு அண்மையில் ஊரதீவு கிராமஅறிவக விழிப்புணர்வுக் கலைநிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றிய ஊர்காவற்றுறை பிரதேச செயலர் எவ். எக்ஸ். செல்வநாயகம் கூறினார்.

இவ் விழாவில் தலைமை வகித்து உரையாற்றிய கனகாம்பிகை வித்தியாலய அதிபர் இராஜதுரை இன்றைய ஊரதீவு மக்களின் எழுச்சிக்கு சகல மட்டத்தினரும் ஆக்கமும் ஊக்கமும கொடுக்க முன் வந்தமை மிகவும் பாராட்டத்தக்கது என்றார்.

இல்லை என்பதை விட இருப்பதைக்கொண்டு செயற்பட்டு எமது தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு ஊரதீவு கிராம அறிவக விழிப்புணர்வு சிறந்த எடுத்துக்காட்டாக அமைந்துள்ளது.

இந்த வகையில் எமது கிராமத்தின் தேவைகளைப் பூர்த்தி செய்து அதனை வளர்ச்சிப்பாதைக்கு இட்டுச் செல்லும் இவ்விழிப்புணர்வுக் குழுவினர் பாராட்டப்பட வேண்டியவர்கள் என வேலணை பிரதேசசபைத் தலைவர் செ. இரத்தினம் குறிப்பிட்டார். (உ- 59)

# விநாகிரி தொழிற்சாலை மன்னாரில் திறப்பு

(மன்னார்)

மன்னார் மாவட்டத்தில் பேசாலை என்னுமிடத்தில் விநாகிரி தொழிற்சாலை ஒன்று வடக்கு அபிவிருத்தி புனர்வாழ்வு, புனரமைப்பு, மற்றும் வடக்கு கிழக்கு தமிழ் விவகாரங்கள் அமைச்சின் நிதி ஒதுக்கீட்டின் கீழ் பனை அபிவிருத்திச் சபையினால் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

இந்தத் தொழிற்சாலைக்கான இயந்திரத் தொகுதிகள் யாவும் மன்னார் மேற்கு தென்னை பனை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்திற்கு வழங்கப்பட்டுள்ளது.

இத்தொழிற்சாலை கடந்த 15 ம் திகதி சமபிரதாய பூர்வமாக மன்னார் அரசாங்க அதிபர் வி. விசுவலிங்கத்தால் திறந்து வைக்கப்பட்டது.

இந்நிகழ்வின் போது பனை அபிவிருத்திச் சபைத்தலைவர் மு. பாககிய நாதன். கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் செல்வி சுவாமிபிள்ளை மாவட்ட கல்விப் பணிப்பாளர் ஆ றெவ்வல் ஈ.பி.டி.பியின் மாவட்ட இணைப்பாளரான தோழர் ஹரிச்சந்திர மற்றும் பல முக்கியஸ்தர்கள் கலந்து சிறப்பித்தனர். (உ)

## சதுரங்கப் போட்டி

# குழுவினர் விரைவில் கண்டி பயணம்

(யாழ்ப்பாணம்)

எதிர் வரும் ஓகஸ்ட் மாதம் 28 ஆம் திகதி தொடக்கம் செப்ரெம்பர் மாதம் 2 ஆம் திகதி வரை கண்டியில் நடைபெறவுள்ள தேசிய மட்டத்திலான சதுரங்கப் போட்டியில் பங்கு பற்ற யாழ். மாவட்டத்தைச்சேர்ந்த 22 மாணவர்கள் செல்வதற்குரிய ஒழுங்குகள் மேற் கொள்ளப்பட்டு வருவதாக யாழ். சதுரங்க சம்மேளன வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

மேற்படி தேசிய மட்டப் போட்டியில் பங்கு பற்றும் வாய்ப்பு யாழ். மாணவர்களுக்கு 20 வருடத்தின் பின்னர் தற்போது கிடைத்திருப்பது குறிப்பிடத்தக்கது.

தேசிய மட்டத்திலான போட்டியில் வெற்றி ஈட்டும் மாணவர்கள் 2002 ஆம் ஆண்டு துருக்கியின் தலைநகரில் நடைபெறவுள்ள ஆசிய மட்டப் போட்டியில் பங்கு பற்றும் வாய்ப்பைப் பெறுவார்கள் என சம்பந்தப்பட்ட வட்டாரங்கள் தெரிவித்தன. (உ-9)

## இளைஞனை காணவில்லை

(யாழ்ப்பாணம்)

மதவடிலேன், சுதுமலை வடக்கு மானிப்பாய் பகுதியைச் சேர்ந்த தேவராசா வசந்தகுமார் (வயது 21) என்ற இளைஞனை கடந்த 10 ஆம் திகதி முதல் காணவில்லை என அவரின் தந்தையினால் மனித உரிமைகள் ஆணைக் குழுவிடம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. [செ-10]

### மின் பிறப்பாக்கி கொள்வனவு

(நல்லூர்)

நல்லூர் பிரதேச சபையினால், சபையின் பாவனைக்காக, 3 லட்சம் ரூபா பெறுமதியான மின்பிறப்பாக்கியொன்று கொள்வனவு செய்யப்படவுள்ளது. (உ-103)

## பவள விழா

கோப்பாய் சரவணபவானந்த வித்தியாலயத்தின் பவள விழாவை இவ்வருடம் ஐப்பசி மாதத்தில் கொண்டாடுவதற்கான ஒழுங்குகளை வித்தியாலயத்தினர் மேற் கொண்டுள்ளனர். (உ-103)

# பாராளுமன்றத்தைக் கூட்டும் வரை

# அரசுக்கெதிரான போராட்டம் தொடரும்

## ஐ. தே. கட்சியின் குழுக் கூட்டத்தில் முடிவு

(கொழும்பு)
அரசாங்கத்துக்கு எதிரான போராட்டங்களை மீண்டும் பாராளுமன்றத்தைக் கூட்டும் வரை நடாத்துவதென்று ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்றக் குழுக் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டுள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் நேற்று பாராளுமன்றக் கட்டிடத் தொகுதியில் கட்சியின் பாராளுமன்றக் குழுக் கூட்டம் இடம் பெற்றது.

இக்கூட்டத்தில் அரசாங்கம் சாத்வீகப் போராட்டத்தை நசுக்க எத்தகைய வன்முறைகளைக் கட்டவிழ்த்து விட்டாலும் மீண்டும் பாராளுமன்றத்தைக்கூட்டும் வரை அரசுக்கு எதிரான போராட்டங்களை முன்னெடுப்பதென்றும், எதிர் வரும் 27ந் திகதி கண்டி மாநகரில் அரசுக்கு எதிரான மாபெரும் மக்கள் போராட்டத்தை நடத்துவதென்றும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை ஐ தே கட்சியினால் கொழும்பில் நேற்று முன் தினம் நடத்தப்பட்ட ஆர்ப்பாட்டப் பேரணியில் பொலிசார் மேற்கொண்ட தாக்குதலின் போது இரு பொது மக்கள் கொலை செய்யப் பட்டது தெரிந்ததே.

இக்கட்சி ஆதரவாளர்களின் இறுதிச் சடங்கை நிறைவேற்ற இரு குழுக்களும் அமைக்கப் பட்டது.

இதில் ஒரு குழுவுக்கு ஐ தே கட்சியின் பிரதித் தலைவர் கரு ஜெயசூரியாவும் அடுத்த குழுவுக்கு காமினி அத்துக்கோறள தலைவர்களாக நியமிக்கப் பட்டுள்ளனர்.

இதேவேளை ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்றக் குழுவும் கட்சி செயற்குழுவும் எதிர் வரும் 24ந் திகதி செவ்வாய்கிழமை கட்சித்தலைவர் ரணில்விக்கிரமசிங்க தலைமையில் மீண்டும் கூடவுள்ளது. [இ]

**ஜேர்மனியில்..**
ஜெனிவா ஹ ஹன்டிமென்டில் மக்களும் ஜேர்மனிய அரசியல் தலைவர்களும் அரசாங்கத்தைக் கோரியுள்ளனர்.

அத்துடன் பிரஸ்தாப குடும்பத்தை நாட்டை விட்டு வெளியேற்றும் நடவடிக்கையை நிறுத்த, தேற்படி மக்களும் அரசியல் தலைவர்களும் நடவடிக்கை எடுத்துள்ளனர். (இ)

**மட்டு...**
குப் பிரயோகத்தில் பொலிசார் ஒருவர் காயமடைந்துள்ளார்.

இத் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தின் போது அக்கறைப்பற்றைச் சேர்ந்த மட்டக்களப்பு ஆசிரிய பயிற்சிக் கலாசாலை ஆசிரியை ஒருவரும் காயமடைந்துள்ளார்.

பொலிசாரும் ஆசிரியையும் சிகிச்சைக்காக மட்டு போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (வ)

**மூன்று.**
லர்.

இதேவேளை கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சிகிச்சையின் பொருட்டு அனுமதிக்கப்பட்டிருந்தவர்களில் 32 பேர் நேற்று வீடு திரும்பி உள்ளனர். (வ,-5)

**வன்முறை...**
மீதலாம் அரசு குற்றம்சாட்டியுள்ளது.

நேற்று முன் தினம் இடம் பெற்ற ஆர்ப்பாட்டத்தின் போது இருவர் கொல்லப்பட்டும் 78 பேர்காயமடைந்தமையும் இங்கு குறிப்பிடத் தக்கது. [வ]

## பாலியல் வல்லுறவு இடம்பெறவில்லை

[மண்டை தீவு]
மண்டை தீவுப் பகுதியில் கடந்த புதன்கிழமை பாலியல் வல்லுறவு இடம்பெற்றதாக வெளியான செய்திகள் தவறானவை யென அறிவிக்கப் பட்டுள்ளது.

கடற்படை சிப்பாய்ஒருவர் பாலியல் ரீதியான சேட்டையிலீடுபட முயற்சித்தபோது பிரஸ்தாப பெண் உயர் அதிகாரியிடம் முறையீடு செய்யப் போவதாக விடுத்த எச்சரிக்கையினால் ஆத்திரமுற்ற சிப்பாய் பெண்ணைத் தாக்கியதாலே காயம் ஏற்பட்டதாகவும் எமது மண்டைதீவு செய்தியாளர் அறிவித்துள்ளார். (ந-11)

**கடுமஷெல்....**
இத்தம்பலை நீண்ட இடைவெளிக்குப் பின் அரியாலைப் பகுதியிலிருந்து நேற்று பல் குழல பீரங்கித் தாக்குதல்களும் மேற்கொள்ளப்பட்டன [ம-110]

**யாழ் பல்கலைக்..**
யாழ் நீதிமன்றில் ஆஜர்படுத் தப்பட்டார்.

இத்தையடுத்து நாளைமறு தினம் 23ந் திகதி திங்கட் கிழமை பல்கலைக்கழகத்தை மீண்டும் இயக்கி விரிவுரைகளை நடத்துமாறும் பல்கலைக்கழக செயற்பாடுகள் முன்னர்போல் நடைபெறுவதற்கு வேண்டிய ஒத்துழைப்பை மாணவர்களை வழங்குமாறும் பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுத்தலைவர் பேராசிரியர் பி ஆர். ஆர். என். மெண்டிஸ்கேட்டுள்ளார். (ம)

## யாழ்.ஊடகவியலாளர் சங்கம் கண்டனம்

[யாழ்ப்பாணம்]
யாழ்ப்பாண ஊடகவியலாளர் சங்கத்தின் தலைவரும் ஐ பி சி செய்தியாளருமான மே. தவச்செல்வம் தாக்கப் பட்டமைக்கு யாழ்ப்பாண ஊடகவியலாளர் சங்கம் கண்டனம் தெரிவித்துள்ளது.

தமிழ் ஊடகவியலாளர்களுக்கு எதிராகப் பலவேறு அச்சுறுத்தல்கள் மிரட்டல்கள், அடக்குமுறைகள் தொடர்ந்த வண்ணமுள்ளன இந்நிலையில் பலவேறு நெருக்கடிகளுக்கு மத்தியில் பணியாற்றும் யாழ்ப்பாண ஊடகவியலாளர்கள் இவ்வாறான அராஜகச் செயல்களை கண்டிப்பதுடன் இவ்வாறான செயற்பாடுகளைக் கட்டுப் படுத்துவதற்கு ஒன்றுதிரண்டு குரல் கொடுக்க முன்வர வேண்டுமெனவும் அக்கண்டண அறிக்கையில் கேட்கப் பட்டுள்ளது. (ந 5)

## வடமராட்சி மீனவர்கள் இருவர் கைது

(நெல்லியடி)
வடமராட்சி பருத்தித்துறை கடற்பரப்பில் மீன்பிடித்து விட்டுதிரும்பிக் கொண்டிருந்த இரு மீனவர்களை இராணுவத்தினர் கைது செய்துள்ளனர்.

நேற்று முன் தினம் இடம் பெற்ற இச் சம்பவத்தில் பருத்தித்துறையை சேர்ந்த ஜேம்ஸ் ஞானேந்திரம் துஷ்யந்தன் (வயது 19), வடமராட்சி கிழக்கை சேர்ந்த இராசரத்தினம் மகேஸ்வரன் (வயது 38) ஆகியோரே கைதுசெய்யப்பட்டவர்களாவர்.

இவர்கள் இருவரும் நேற்று பருத்தித்துறை மாவட்ட நீதிபதி எஸ். ஏ இ. ஏகநாதன் முன்நிலையில் ஆஜர் செய்யப் பட்டனர்.

இவர்கள் இருவரையும்தலா 2500ரூபா காசுப்பிணையிலும் 5000 ரூபா சரீரப்பிணையிலும் விடுதலை செய்யுமாறு நீதவான் உத்தரவிட்டுள்ளார். (ந-5-23-43)

**வன்முறை ...**
டையேகருத்துமுரண்பாடுகள் நிலவுவதாகவும் இதற்கு பிரதி பாதுகாப்பு அமைச்சர் அனுருத்தரதவத்த விளக்கம்அளித்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது. (வ)

## மிதி வெடியில் காலிழப்பு

[மந்திகை]
சாவகச்சேரி மீசாலைப்பகுதியில் மிதிவெடியில்சிக்கியஒருவர் தனது வலதுகாலை இழந்துள்ளார்.

நேற்றுக் காலை 7 மணியளவில் தனது வீட்டை துப்பரவுசெய்த கந்தசாமி றஜீவன் (வயது-16 என்பவரே காலை இழந்தவராவர். இவர் பருத்தித்துறை ஆதார வைத்திய சாலையில் அனுமதிக்கப் பட்டுள்ளார். (ந-5-23)

## நூல்கள் அன்பளிப்பு

[யாழ்ப்பாணம்]
யாழ் பொது நூலகத்திற்கு நூல்கள் அன்பளிப்பு செய்யப் படவுள்ளதாக யாழ் பாதுகாப்புநடவடிக்கைதலைமையகம் வெளியிட்ட செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நூல்களில் 652 தமிழ் மொழிநூல்களும் 272ஆங்கில மொழி நூல்களும் உள்ளடங்குவதுடன நூல்களைக் கையளிப்பதற்கான ஏற்பாடுகளை பாதுகாப்புநடவடிக்கைதலைமையதிகாரி மேற்கொண்டுள்ளதாகவும் அச்செய்திக் குறிப்பில் தெரிவிக்கப் பட்டுள்ளது. (ந-5)

**பிற்போடப்பட்டது**
(யாழ்ப்பாணம்)
இலங்கை உலகப்பந்தாட்ட சங்கத்தின் ஆதரவில் யாழ் லீக்குழுக்கும், பருத்தித்துறை லீக்குழுக்கும் இடையில் இன்று இடம்பெறவிருந்த உதைபந்தாட்டப் போட்டிபிற்போடப் பட்டுள்ளதாகவும் போட்டி நடைபெறும் திகதிபின்னர் அறிவிக்கப்படும் எனவும்தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ 110)

**இன்று நடைபெறாது**
யாழ் மத்திய கல்லூரியில் நடைபெற்றுவந்த சமுதாய உதவியாளர்களுக்கான பயிற்சி வகுப்புகள் இன்று நடைபெறமாட்டாது என அறிவிக்கப் பட்டுள்ளது.

மீண்டும் எதிர் வரும் 28, 29 மதிகதிகளில் இவ்வகுப்புக்கள் நடைபெறுமென உடுவில் பிரதேச செயலகக்கணக்காளர் நா. இராசநாயகம் அறிவித்துள்ளார். (ந-8)

பலநோக்கு கூட்டுறவுச் சங்கத் தலைவர்கள், முகாமையாளர்கள், கிளை முகாமையாளர்கள், உதவியாளர்கள் அனைவருக்கும்

**லாலா சோப் ஸ்தாபனத்தாரின் அன்பான வேண்டுகோள்**

யாழ். குடாநாட்டில் சிறுகைத் தொழிலாக உற்பத்தி செய்யப்படும் லாலா சோப், சனசயின சோப் என்பவற்றை தங்கள் சங்கங்கள் ஊடாக கூடுதல் விற்பனை செய்து எமது சிறுகைத் தொழிலுக்கு ஆக்கமும், ஊக்கமும் தருவீர்களானால் எமது யாழ் குடாநாட்டிற்குத் தேவையான சோப்பை உற்பத்தி செய்து எமது வளத்தைப் பெருக்கி இங்கு வறுமைக் கோட்டிற்குள் வாழும் அநேகமான இளம் சந்ததியினருக்கு வேலை வாய்ப்புகளை வழங்க முடியும் என்பதனையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

லாலா சோப் ஸ்தாபனத்தார்,
அச்சுவேலி. (கி-2248)

**ராஜா**
**யாழ்ப்பாணம்**
இடைசி வாரம்
லக்கிஸ்டார் அஜித்
(9 வேடங்களில்)
வசுந்தராதாஸ்,
மீனா, நகமா
மற்றும் பலர் நடித்த
STR பிலிம்ஸ்
**சிட்டிசன்**
தினசரி: 10-30, 2-30 [பு நே]
சனி ஞாயிறு 10-30, 2-00, 5 00 [பு நே]
(கி-2125)

உங்களது நயம், நம்பிக்கை நாணயமுள்ள, தங்க வைர நகைகளுக்கு சிறந்த ஸ்தாபனம்..

**நியூ நகுலா ஜுவல்லறி**
74, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

**நியூ லலிதாஸ் ஜுவல்லறி**
171, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்,

[கி/2195]

**நகுலா நகைமாடம்**
24G, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

இப்பத்திரிகை ''வலம்புரி'' அன்கோ ஸ்தாபனத்தாரால் இல. 15, வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் எனும் விலாசத்தில் அமைந்துள்ள அவர்களது அச்சகத்தில் 2001ஆம் ஆண்டு யூலை மாதம் 21 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது